பகுத்தறிவு.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தினின்று
வெளிவரும் ஓர் மாத வெளியீடு,

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 1. } ஈரோடு 1935 மே 1. { இதழ் 1.

பகுத்தறிவின் மாட்சி.

(இராகம்—வராளி. தாளம்—ஆதி.)

பல்லவி.

பாடுவோமே—துள்ளிப்—பாடுவோமே
பகுத்தறி வுணர்ச்சியைப் பெற்று விட்டோமென்று
[பாடுவோமே]

சரணங்கள்.

1. மூடுபனி போன்றமதக்
கூட்டம் எல்லாம்—இங்கு
மூண்டபகுத் தறிவென்னும்
சூரியன் முன்னே
ஓடியொளிக் கின்றவொரு
காட்சி கண்டோம்—உண்மை
ஓங்கிவளர் விஞ்ஞான
மாட்சி கண்டோம் [பாடுவோமே]

2. சாதியழிந் தோடுகின்ற
காலம் வந்ததே—கெட்ட
சமயமழிந் தோடுகின்ற
காலம் வந்ததே

ஆதியழிந் தோடுகின்ற
காலம் வந்ததே—நல்ல
அறிவுவளர்ந் தோங்குகின்ற
காலம் வந்ததே [பாடுவோமே]

3. சாத்திரங்கள் பொய்மொழியே
என்ப தறிந்தோம்—அவை
சஞ்சலங்கள் தந்தனவே
என்ப துணர்ந்தோம்
ஆத்திரங்கொண் டவையெல்லாம்
தீயில் எரிப்போம்—பெரும்
அன்புப்பயிர் ஓங்கிடவே
எங்கும் வளர்ப்போம் [பாடுவோமே]

4. கண்ணுமனங் காயங்கட்கும்
எட்டா ஒன்றே—இந்தக்
காசினியில் வாழ்வோரை
ஆட்டுமென்றே
மண்ணுலக வாழ்வுபோக
வார்த்தை பேசி—நம்மை
மயங்கவைக்கும் குருவென்போர்
வஞ்சம் போக்கி [பாடுவோமே]

5. எங்குஞ்சென்று சுதந்தர
நாதஞ் செய்வோம்—நாம்
எல்லோரும் ஒன்றெனவே
போதஞ் செய்வோம்
இங்குறையுஞ் சோம்பேறி
வாழ்க்கை போக்கி—மிக
இன்பமுடன் வாழ்ந்திருக்கும்
வாழ்வை யாக்கி [பாடுவோமே]

6. பொய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வு போச்சே—தர்ப்பைப்
புல்லினுக்குப் பணிவோரின்
தாழ்வு போச்சே
மெய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வும் ஆச்சே—இந்த
மேதினியில் எங்குஞ்சம
வாழ்வும் ஆச்சே [பாடுவோமே]

(சாமி சிதம்பரனார்.)

நமது பத்திரிகை.

குடி அரசுப் பதிப்பகத்தினின்று "பகுத்தறிவு" என்ற பெயரால் ஒரு மாதப்பத்திரிகை வெளியிட வேண்டுமென்ற அபிப்பிராயம் 6,7 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தது. காலஞ்சென்ற ஈ. வெ. ரா. நாகம்மாள் அவர்கள் 1928ம் ஆண்டிலேயே அரசாங்கத்தில் ரிஜிஸ்டர் செய்து "பகுத்தறிவு" மாதப்பத்திரிகையைப் பிரசுரஞ்செய்ய அனுமதியும் பெற்றிருந்தார்கள் என்பதைக் "குடி அரசு" வாசகர்கள் நன்கறிவர். ஆனால் பலப்பல காரணங்களால் அம்மையாரின் முயற்சி தடைப்பட்டுப் போய்விட்டது.

தமிழ் மக்களிடையே அதிதீவிரமாக அறிவியல் கொள்கைகளைப் பரப்பவேண்டுமென்றும், அவ்வாறு பரப்புவதற்கு ஓர் தனிப்பத்திரிகை, வேறு எவ்வித நோக்கமுமின்றி அறிவியற் கொள்கைகளைப் பரப்பும் நோக்கம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு ஓர் நல்ல ஸ்தாபனத்தினின்று பிரசுரிக்கப்பட்டு தொண்டாற்றி வரவேண்டும் என்ற அபிப்பிராயம் நமக்குமட்டுமல்ல—பல அறிஞர்களுக்குமிருந்து வந்தது.

எனவே 1935-ம் ஆண்டு மே-மாதம் 'பகுத்தறிவை' நமது பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தினின்று வெளியிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்று அவ்வாறே இப்பொழுது வெளிவந்திருக்கின்றது.

"பகுத்தறிவு" தமிழ் மக்களிடையே அறிவியல் கொள்கைகளை அதிதீவிரமாகப்பரப்ப முயற்சி செய்யும்; விஞ்ஞான மேம்பாட்டை விளக்கமாக எடுத்துக்காட்டும்; மேனாட்டு மெஞ்ஞானப் புலவர்கள் கண்ட அரியபெரிய அற்புதங்களையெல்லாம் தெள்ளிதில் விளக்கும்; மூட நம்பிக்கைகளையும் குருட்டுப்—பழக்க வழக்கங்களையும், புரோகிதப் பித்தலாட்டங்களையும், சாதி சமய சாத்திரப் புரட்டுகளையும் புட்டுப்புட்டுக்காட்டும். சுருங்கக்கூறின் அறிவுக்கு மாறுபட்ட அனைத்தையும் நிர்த்தூளி பண்ணி யாண்டும் அறிவின் ஜோதி ஜொலிக்கத் தன்னாலான எல்லாத்தொண்டினையும் செய்து தமிழ் மக்களின் வாழ்க்கையை இன்பகரமாகச் செய்வதையே தனது கட

அறிவின் பயன்.

ஈ. வெ. ரா.

பகுத்தறிவு என்று சொல்லப்படுவது பொதுப் பெயரானாலும் அது மனிதனுடைய அறிவுக்கே உபயோகப்படுத்தப்படுவதாகும்.

மனிதன் உலகிலுள்ள பல்வேறு ஜீவப்பிராணிகளில் ஒன்றானாலும் உருக்காணமுடியாத சிறிய கிருமியிலிருந்து பெரிய திமிங்கலம் வரையிலுள்ள கோடானுகோடி வகை ஜீவன்களைப்போன்ற ஒரு ஜீவனேயானாலும், மற்ற ஜீவன்களின் உயிர் போலவே மனிதனுடைய உயிரும் ஒரு உயிரேயானாலும், மற்ற ஜீவன்களுக்குக் குறிப்பிடும் சரீரதத்துவம், ஜீவ தத்துவம் போலவே மனிதனுக்குமுடையது என்றாலும, பகுத்தறிவு என்பது மனிதனுக்கு மாத்திரம் உண்டு என்று சொல்லப்படுவதினாலேதான் மனிதன் மற்ற ஜீவப்பிராணிகளைவிட வேறுபட்டவனாகவும், மேலானவனாகவும் உலக வழக்கில் மதிக்கப்படுகிறான்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

னாகக் கொண்டு வேலை செய்ய முனைந்து பகுத்தறிவு இன்று உங்கள் முன் வந்துளது. நேயர்கள் நல்வரவேற்று பகுத்தறிவு வளர முயற்சி செய்வார்களென்று பெரிதும்நம்புகிறோம்.

இதன் வருடசந்தா இதை விடமிகக்குறைவாக இருக்கவேண்டுமென்று கருதியிருந்தோமாயினும் பெரிய அளவில் பல அரிய கட்டுரைகளுடனும் அதிகப் பக்கங்களுடனும் அழகிய முறையிலும் நடத்தவேண்டுமென்ற நோக்கத்தினால் இதைவிடக் குறைக்க முடியாமல் வருட சந்தா ரூ 1. ஏற்படுத்தியிருக்கின்றோம்.

தமிழ் மக்கள் "பகுத்தறிவை" உல்லங்கனம் செய்துவிடாது உவகையுடன் வரவேற்று ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தார்.

இப்படி மதிக்கப்படுவது சரியா தப்பா என்பது விவகாரத்திற்கு உரியதானாலும், இப்பகுத்தறிவை மனிதன் உடையவனாயிருப்பதின் காரணமாய் மனித ஜீவனுக்கு ஏதாவது உண்மையான சந்தோஷமும், திருப்தியும் ஏற்பட்டிருக்கின்றதா என்று பார்ப்போமேயானால், இல்லை என்றுதான் சொல்லவேண்டியதிருக்கிறது. அதுவும் பகுத்தறிவு ஏற்பட்டதாலேயே மனித சமூகத்துக்குச் சந்தோஷமும், திருப்தியும் ஏற்பட இடமில்லாமல் போய்விட்டது என்று கூட சொல்லவேண்டியது இருக்கிறது. ஆனால் இதைச் சரியென்று யாராவது ஒப்புக்கொள்ளமுடியுமா என்று பார்த்தால் பகுத்தறிவின் காரணமாக மனிதனுக்கு சுகமும், திருப்தியும் இல்லையென்று சொல்லுவது நியாயமாகாது. என்றாலும் பிரத்தியக்ஷத்தில் அப்படித்தான் காணப்படுகின்றது.

ஆகவே இதற்கு ஏதாவது காரணம் இருந்தாகவேண்டும் அல்லவா? அந்தக் காரணம் என்னவென்றால் மனிதன் தன் பகுத்தறிவைச் சரியானபடி பயன்படுத்தாமலும், பகுத்தறிவுக்கு விரோதமான விஷயங்களை மனிதன் ஏற்றுக்கொள்வதாலும் மனித சமூகத்துக்குச் சந்தோஷமும், திருப்தியும் இல்லாமல் போய்விட்டது.

மனிதன் உலக சுபாவத்தையே தப்பாய் நிர்ணயித்துக்கொண்டு, மனித ஜன்மமே சுகமனுபவிக்க ஏற்பட்டதென்றும், வாழ்க்கையே துக்கமென்றும், சம்சாரமானது "சாகரம்" "துக்கம்" என்று கருதுவதன் மூலம் தனது துக்கத்திற்கும், அதிருப்திக்கும் பரிகாரம் தேடாமல் அநுபவித்து வருகிறான்.

இந்த மேற்கண்ட நம்பிக்கைகளும், எண்ணங்களுமே மனித சமூக துக்கத்துக்கும், அதிருப்திக்கும் இடம் கொடுத்து வருகிறது என்பதை உணருவதில்லை, இப்படி உணர முடியாமல் போனதற்கும் பகுத்தறிவைச் சுதந்தரத்தோடும் துணிவோடும் பயன்படுத்தாத காரணமேயாகும்,

இந்தப்படி சுதந்தரத்தோடும், துணிவோடும் பகுத்தறிவு என்பதை பயன்படுத்தக்கூடாது என்கின்ற நிபந்தனைகள் வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் இருந்துவர, மனிதன் ஆதியில் அநுமதித்துக்கொண்டதே இந்நிலைக்குக் காரணமாகும். என்றாலும் அதிலிருந்து விடுதலை பெறமுடியாது என்று தீர்மானித்துவிடுதல் கூடாது.

இப்பொழுதுகூட மனிதன் தன்னைக் கட்டுப்படுத்தியும், தன்னைச் சூழ்ந்தும் தனக்குள் புகுத்தப்பட்டும் இருக்கின்ற விஷயங்களாகிய சமூகக்கட்டுப்பாடு, அரசியல் கட்டுப்பாடு, மதக்கட்டுப்பாடு, பழக்க வழக்கக் கட்டுப்பாடு முதலியவைகளை விலக்கிவிட்டுத் தனியாக, சுதந்தர மனிதனாக, பரிசுத்த உணர்ச்சியுடன் ஒவ்வொன்றையும் நிர்வாணமாகப் பார்க்கும் பரிசுத்தக் கண்ணுடன் இருந்து, பகுத்தறிவைத் துணிவோடு உபயோகப்படுத்துவானேயாகில் பகுத்தறிவால் அறியக்கூடிய உண்மையையும், பயனையும் அறியாமலும், அடையாமலும் இருக்க முடியாது.

இன்று மனிதனுடைய பகுத்தறிவை அடக்கிக்கொண்டிருப்பவைகளில் முக்கியமானவை இயற்கையின் உண்மையை அறியமுடியாமல் செய்து வருவதற்கு ஏதுவான தலைவிதி, முன்ஜன்ம பலன், கடவுள் செயல் என்பன போன்ற உபதேசங்களே யாகும். இவ்வுபதேசங்களுக்குக் கட்டுப்பட்ட எவனும் பகுத்தறிவின் பயனான இயற்கையை உணர்ந்து அதைத் தனக்கு அடிமையாக்கிக்கொண்டு சந்தோஷமும், திருப்தியும், அடையும் பேற்றை எவனும் அடையவே முடியாது. ஆகலால் ஒவ்வொரு மனிதனும் பகுத்தறிவை அவனது சந்தோஷமும் திருப்தியுமான வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தப்படி பயன்படுத்திக்கொள்ளுவதற்கு ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய கண்ணையும், மனத்தையும், நிர்வாணமாகவும், பரிசுத்தமாகவும் வைத்துக்கொண்டு பார்க்கவேண்டும்.

இந்த நிலைமையையும், தன்மையையும் ஒவ்வொரு மனிதனும் அடையவே "பகுத்தறிவு" உலகில் உலவிவந்து மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

மாதர் சுதந்திரம்.

(மிஸ் ஈதேல் மன்னின் எழுதுகிறார்.)

ஜனங்கள் "விவாக முறை" என்னும் வழக்கம் ஏற்பட்டுப் போகுமாவென்று என்னைக் கேட்பதுண்டு, அதற்கு நான் அம்முறை காலக்கிரமத்தில் கட்டாயம் அழிந்தே போகும் என்று பதில் சொல்லுவதுண்டு. ஏனென்றால் மானிட வாழ்க்கைச் சுதந்தரங்களுக்குப் பலத்த முட்டுக்கட்டையாக இருப்ப

தும் மக்கள் இன்பத்தைக்கெடுத்து அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தி வைப்பதும் விவாகமே என்பது என் அபிப்பிராயம். அக்கஷ்டத்தை மனிதர்கள் இப்போது நன்கு உணர்ந்து வருகிறார்கள். மாதா கோவிலில் போய் செய்யப்படாத விவாகம் சரியான விவாகம் அல்லவென்று முற்காலத்தில் நினைத்து வந்தனர். யுத்த காலத்திலிருந்து ரிஜிஸ்டர் ஆபீஸ் விவாகங்கள் மலிந்துவிட்டன. அதனால் விவாகம் தெய்வீகத்தன்மை கொண்டது என்ற எண்ணம் மாறி அது சாதாரண—பரஸ்பர ஒப்பந்த முறையாகக் கருதப்பட்டு வருகிறது விவாகம் முற்காலங்களில் ஜன்ம தண்டனையாக அமைந்து வந்தது. தற்செயலாய் அனுபவிக்க நேரிடும் அத்தகைய துன்பங்களை வெகு காலமாக ஜனங்கள் அனுபவித்து வந்தது ஆச்சரியத்தை உண்டாக்கும் விஷயமாகும். கண்மூடித் தனமாக நன்மைக்காகவோ, தீமைக்காகவோ அத்தகைய நிலைமைக்கு ஒருவர் உட்படுவது மகா கேவலமான விஷயம். மரணம் தான் அக்கஷ்டத்தையோ, சுகத்தையோ மாற்றவல்லதாக இருந்திருக்கிறது.

ஒப்பந்த விவாக முறையில் அத்தகைய நீதிகள் கிடையா. பெண்கள் சுதந்தரம் பெற்று முன்னேறி வரும்போதும், ஆண் பெண் தொடர்பு சம்பந்தமாகவுள்ள ஒழுக்க முறைகள் சீர்பட்டு வரும்போதும் அர்த்தமற்ற பழைய கால ஒழுங்கு முறைகள் மறைந்து போவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ரிஜிஸ்டர் ஆபீஸ் விவாகங்கள் அதிகப்படுவதாலும், விவாக ரத்துகள் விருத்தியாவதாலும், பழைய கால விவாக முறை அழிந்துபோகுமென்பதில் சந்தேகமில்லை. விவாகத்தில் வெகு காலமாக ஜனங்கள் கொண்டிருந்த விசித்திரமான கற்பிதம் குறைந்து வருகிறது. விவாகம் ஒப்பந்தமாகவே உணரப்பட்டு வருகிறது. இவ்விஷயங்களைப் பற்றி நான் கூறுவதால் நான் சௌகரியமான விவாகத்தைப் பற்றி எடுத்து உரைப்பதாகவும், காதலில்லாக் கல்யாணத்தை ஆதரிப்பதாகவும் நினைக்கவேண்டாம். நான் காதல் மிகுந்த கல்யாணத்தையும், ரத்தாகக்கூடாத விவாகத்தையுமே சிபார்சு செய்கிறேன்.

தற்கால விவாக முறைகளால் இத்தகைய உயரிய பிணைப்பு ஏற்படக்கூடியதாக இல்லை. தற்கால ஏற்பாட்டால் தம்பதிகளுக்குள் ஒற்றுமை ஏற்படுவதில்லை. அதனாலேயே இம்முறையை மாற்ற யோசிக்கிறோம்.

மானிட வர்க்கத்தில் மாற்றம் இராது. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழவே பிரியப்படுகின்றனர். ஆகவே அந்த அபிப்பிராயத்தை மாற்ற முடியாது. அதனால் அநுபவத்திற்குச் சாத்தியமில்லாத முறைகளை ஏற்படுத்தி அநுஷ்டிக்க நிர்ப்பந்திப்பது கூடாது. ஆகவே பழையன கழிதல் வேண்டும். நமக்கு வாழ்க்கையில் உண்மையாகவே அதிருப்தியும் சமாதானக் குறைவும் ஏற்பட்டு வருகையில் விவாக முறைகளை நாம் ஆண் பெண் இன்ப வாழ்க்கைக்குத் தக்கவாறு விவாக சம்பந்த காலம் நீடித்து இருக்கக்கூடிய மாதிரியில் சட்டங்கள் வகுக்கவேண்டும்.

இது சம்பந்தமாக திரு ஜஸ்டிஸ் மெக்கார்டி "ஒரு பெண்ணின் தேகம் அவளுடைய புருஷனுடையதல்ல. அது அவளுடையதேயாகும். அங்ஙனமே விவாக சட்டங்கள் காரணமாக ஒரு புருஷனுடைய தேகமும் அவனுடைய மனைவியுடையதாகாது" என்று கூறியிருக்கிறார். விவாக சம்பந்தமாய் பெண்கள் தாங்கள் நடத்தப்படும் முறையில் பெரிதும் அதிருப்தி கொண்டு வருகிறார்கள். விவாகத்தில் அவர்கள் சுதந்தரம் விரும்புகிறார்கள். அதனை ஆண்பிள்ளைகள் விரும்பாமல் எதிர்க்கிறார்கள். ஆதலால் மனித சுபாவத்தை அநுசரித்து ஆண் பெண் இரு பாலரும் ஒன்று சேர்ந்து விவாக முறைகளைத் திருத்திக்கொள்ளுவதே நீதியாகும்.

பெண்களுக்கு அதிகமான சுதந்தரம் கொடுக்கப்பட்டால், அவர்கள் கெட்டுப்போய்விடுவார்கள் என்றும் அதனால் ஆடவர் பெண்டிர்களுக்குள் கூடாநட்பு விருத்தியாகுமென்றும் பழைய முறைப் பற்றுள்ள ஆண் பிள்ளைகள் கூறுகின்றனர். இது பொருந்தா நியாயமாகும். பரஸ்பரம் அன்பற்ற காதலர்கள் எவ்வகையிலும் விசுவாசமுள்ளவர்களாக இருக்கமுடியாது என்பது உண்மை. அதைத் தடுக்க யாராலும் முடியவே முடியாது.

ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் பூரண சுதந்தரம் கொடுத்துவிட்டால் அவர்கள் தீங்கான விஷயத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். அப்போதுதான் அநீதி செய்வதற்கு அஞ்சுவார்கள். இனி பழைய காலத்து விவாக முறைகள் நமக்கும் பிரயோஜனப்படாது என்பது திண்ணம். இனி பெண்களும் ஆண்களும் பகிரங்கமாகப் பழைய முறைகளை எதிர்க்க முன் வருவார்கள்.

பகுத்தறிவு.

(டாக்டர் பராஞ்சிபை, M. A. D. Sc. அவர்கள் கருத்து)

அறிவுக்கு முதலிடத்தைக் கொடுப்பது; அநுபவத்தினு லும், பழக்கத்தினுலும், நிரூபிக்கக்கூடிய உண்மை விஷயத்தையும், நீதி நூலையும் நிலை நாட்டுவது; கொடுங்கோன்மையான கொள்கைகளையும் நீதிகளையும் எதிர்த்துப் போராடுவது; சுதந்தரத்துடன் வாழ வேண்டுமென்னும் மனப்பான்மையைக்கொண்டு இருப்பது; இந்த அறிவே பகுத்தறிவு என்று கூறப்பட்டு வருகின்றது.

இத்தகைய மொழிகளால் தான் பகுத்தறிவாளர்களின் இயக்கம் தன்னுடைய கொள்கையை உலகினர்க்கு எடுத்துரைக்கின்றது. தன்னுடைய கொள்கையை மேலும் மேலும் வளர்க்க முயல்கின்றது. உலகிலுள்ள எல்லா மக்களும், இக்கொள்கையைப் பின்பற்றுவார்களானால் மனித சமூகம் மிக விரைவில் முன்னேற்றமடையக்கூடும். மக்கள் இப்பொழுது அடைந்து வரும் துன்பங்களும் சேதங்களும் அடியோடு மறைந்து விடவும் கூடும். இதைப் பகுத்தறிவு இயக்கம் முழுதும் நம்புகின்றது.

ஒருமனிதன் இத்தகைய மனப்பான்மையை அடைவானானால் அப்பொழுது தான் அவன் தன்னைச் சுற்றியுள்ளவைகளுக்குத்தக்கவாறு தன்னைத் தகுதியுள்ளவனாகச்செய்து கொள்ளமுடியும், அன்றியும் அவன்தான் மனிதனாகப் பிறந்ததின் பயனையும் அறிவான். உலகிலுள்ள மக்கள் யாவரும் தனது உயர்ந்த கொள்கையினால் இன்புற்று வாழும் பொருட்டுத்தன்னால் இயன்ற அளவில் உதவியும் செய்தவனாவான்.

பகுத்தறிவு என்பது எவ்விஷயத்தையும் ஆராய்ந்து அறிந்து கொள்வதே ஆகும். அதாவது:- மனிதன் தனது அறிவை வீணாக்காமல் அதை எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் பயன் படுத்துவதேயாகும். எப்படிப் பட்ட சிக்கலான விஷயமானாலும் பகுத்தறிவாளன் தன்

னால் முடிந்தவரையிலும் அறிவைப்பயன்படுத்தி அவ்விஷயத்தை வெற்றியாக நிறைவேற்றவே முயலுவான்.

ஒருக்கால் அவனால் ஒருவிஷயத்தைப்பற்றி முடிவுசெய்ய இயலாமல் போனாலும் கூட, அவன் தனது அறிவு ஆராய்ச்சிக்கு அகப்படாத எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளவோ, ஆதரிக்கவோ முன் வரமாட்டான்; ஆனால் அச்சமயத்தில் அவன் தனது அறியாமையை ஒப்புக்கொண்டு அமைதியுடன் இருப்பான். பகுத்தறிவாளிக்கு இன்னும் ஒருவித உறுதியான நம்பிக்கையும் உண்டு. அதாவது:— காலாவட்டத்தில் மனிதனுடைய அறிவும் ஆராய்ச்சியும் வளர்ந்துகொண்டே வருவதனால், எத்தகைய சிக்கலான விஷயத்தையும் இன்றில்லாவிட்டாலும் நாளைக்காவது வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவந்து விடலாம் என்பது; இதுவே அவன் நம்பிக்கை. ஆதலால்தான் அவன் "இதுவரையிலும் செல்லலாம்; இதற்குமேல் நீ செல்லக்கூடாது" என்று எவ்விஷயத்திலும் கட்டுப்பாடு செய்வதில்லை. மேலும் சந்தேகத்தையோ, அல்லது வேற்றுமையையோ, உண்டாக்கக்கூடிய, எவ்வித ஒழுங்குக்கும், நீதிக்கும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்வதற்கும் அவன் சம்மதிப்பதில்லை. இவ்விஷயத்தை அவன் தன் முழு பலத்தோடும் மறுக்கின்றான். பகுத்தறிவுக்குப் பொருந்தாத எத்தகைய ஒழுங்காவது, அல்லது நீதியாவது, அறிவு சம்பந்தமான துறையிலோ அல்லது சமூக சம்பந்தமான துறையிலோ காணப்பட்டபோதிலும் அவனுக்கு அதைப்பற்றிய அக்கறையோ கவலையோ சிறிதும் கிடையாது.

நாட்டில் குழப்பத்தை உண்டாக்கும் ஒரு தேசீயப் புரட்சிக்காரனும், ஒரு பகுத்தறிவாளனும், ஒரு தன்மையர் எனக் கருதுதல் தவறாகும்.

பகுத்தறிவாளி, தனது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டக்கூடிய உண்மைகளையே ஒப்புக்கொள்ளுவான்; அவைகளும் அனுபவத்திலும், பழக்கத்திலும் ஒன்றோடொன்று மாறுபடாமலிருக்கின்றனவா என்பதை ஆராய்வான்; அதன் பிறகே அவைகளைத் தற்சமய முடிவுகள் என்று எண்ணி ஒப்புக்கொள்ளுகிறான். பின்னால் அந்த முடிவுகள் தவறு என்று தெரியுமானால் உடனே அவன் முதலில் கொண்ட முடிவை மாற்றிக்கொள்ளப் பின்வாங்கமாட்டான்.

பகுத்தறிவாளன் தன்னால் முடிந்தவரையிலும், காலம் வாய்க்கும்போதெல்லாம் பல புதிய உண்மைகளைக்கண்டு பிடிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுகிறான். அவனுடைய ஆராய்ச்சித்துறையில் மனமகிழ்ச்சிக்குரிய சில புதிய உண்மைகள் தோன்றினாலும் அவன் திருப்தியடைவதில்லை; தனது ஆராய்ச்சியை விட்டுவிடுவதும் இல்லை. அவனும் மக்கட் சமூகத்தில் ஒரு உறுப்பினனாக இருப்பதனால் தனது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மாறுபடாத பழக்க வழக்கங்களையும் செயல்களையும் ஏற்றுக்கொள்ளுகின்றான்.

ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைப்பற்றி அது பண்டைப்பெரியோர்களால், சில கட்டுப்பாடுகளுடனும் ஆராய்ச்சியுடனுமே ஏற்படுத்தப்பட்டதென்று கூறினால், பகுத்தறிவாளன் அந்நிகழ்ச்சியின் காரணங்களை மிகவும் தாராள மனப்பான்மையுடன் ஆராய்ந்து பார்க்க முன் வருவான்.

பகுத்தறிவாளன் தனது எதிர்கால வாழ்க்கையை ஒரு நிலைப்படுத்துவதற்காகவே ஆராய்ச்சி செய்கிறான். அந்த ஆராய்ச்சியின் அடிப்படையான முடிவுகளையெல்லாம் பெரிய ஜனசமூக வரலாற்றின் ஒருபகுதியென்றே உணர்ந்துகொள்ளுகிறான்; அவ்வாறு நினைத்தாலும் ஜனசமூகச்சரித புத்தகமானது எக்காலத்திலும் முடிவுபெற்று விடாதென்றும், அடிக்கடி வளர்ந்துகொண்டே வருகின்றதென்றும், அவன் உறுதியாக நம்புகின்றான். மனித சமூகச்சரிதத்தின் சில பகுதிகளில் ''முற்றுப்பெற்றது'' என்னும் சொல் எழுதப்பட்டிருப்பதாக எவனொருவன் கூறிப்போரிடுகின்றானோ அவனைத் தான் பகுத்தறிவாளன் எதிர்க்கின்றான்.

ஆகையால் மறைக்கப் பட்டிருப்பதாகவோ, முடிந்து விட்டதாகவோ, கூறப்பட்டிருக்கும் பகுதிகளைத் தனது அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து விளக்கம் செய்ய வேண்டியதே பகுத்தறிவாளனுடைய முதன்மையான கடமையாகும்.

விசாரணை செய்யவும், ஆராய்ச்சி செய்யவும், விவாதம் செய்யவும், சுதந்தரம் அளிக்காத மதம், உண்மையான மதமாயிருக்க முடியாதென்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

M. R. ஜேயகர்.

முத்துமாலை

"கடவுள்" கூற்று

(லண்டன் பகுத்தறிவு பிரசுர சபை வெளியீடு)

அன்னம்மாள் எனப்பட்ட ஒரு பெண் ஒரு முத்துமாலையை வைத்துக் கொண்டிருந்ததோடு, அதை கௌரவமாகவும் மதித்துவந்தாள். சமயம் வாய்த்தபொழுதெல்லாம் அதை மற்றவர்களுக்குக் காட்டி அதன் உயர்ந்த விலை மதிப்பைப் பற்றி டாம்பீகமாகப் பேசுவாள். அஃது அவளது நண்பர்களின் உள்ளத்தில் நன்கு பதிந்துவிட்டது. அவர்கள் அவளது வார்த்தையை உண்மை என்று நம்பி விட்டார்கள். ஆனால் ஒரு நாள் ஒரு புதியவர் அம்முத்து மாலையைப் பார்த்துவிட்டு "உனது முத்துமாலையின் விலை எட்டணாவிற்கு மேற்பட முடியாது" என்று அவளிடம் கூறினார்.

அன்னம்மாளுக்கு உடனே ஆத்திரமும், வருத்தமுமுண்டாகிவிட்டது, "இம்முத்துமாலை எனது தாயரும், அவளுக்குமுன் அவளுடைய தாயாரும் உபயோகித்து வந்தது. இது அனேக சந்ததிகளாக என் குடும்பத்தாரால் உபயோகிக்கப் பட்டு வந்ததென்று அநேக சமயங்களில் என் தாயார் எனக்கு உறுதி கூறியுள்ளார். இம்மாலை உண்மையிலேயே விலை உயர்ந்தது. இது ஆயிரக்கணக்கான ரூபாய் விலை பெறும். இதை நீர் மறுப்பதானால் என் தாயார் பொய் சொன்னாள் என்று கூறத்துணிகிறீரா?" என்ற ஒரு கேள்வியுடன் பதிலளித்தாள். அதற்குப் புதியவர்,

"அதைப்பற்றி விவாதிக்க வேண்டுவதில்லை, ஏனெனில் இதன் உண்மையை வெகு சுலபத்தில் கண்டுபிடித்துவிடலாம். நாம் இருவரும் கைதேர்ந்த ஒரு வியாபாரியிடம் செல்வோம்; அவன் இதைப்பற்றி சோதித்து முடிவைச் சொல்லட்டும்" என்று பெருமையாய் பதிலளித்தார்.

"என்ன! எனது முத்துமாலையைப் பரிசோதிப்பதா? அதற்கு ஒப்புக்கொள்ள முடியாது; நான் அவனுடைய பரிசோதனையை நம்பக்கூடாது. எனது முன்னோர்கள் கூறிக்கொண்டு வந்த சம்பிரதாயத்தைத் தான் நம்புவேன். மிற்க, உனது நகைப் பரிசோதகன் எனது முத்துமாலை உபயோக கமற்றது என்று நிரூபித்து விட்டால் எனது மனதுடைந்து போகும். ஆகவே நான் எனது முத்துமாலையைப் பரிசோதித்துப் பார்க்க ஒப்புக்கொள்ளமாட்டேன்" என்று அன்னம்மாள் வெகு கோபத்துடன் படபடவென்று கூறினாள். அதற்குப் புதியவர்,

"நல்லது; உனக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதாயிருந்தால் உனது முத்துமாலை விலையுயர்ந்தது என்று நம்பிக்கொண்டே இரு. ஆனால் அந்த நம்பிக்கையானது உனக்கு எவ்வளவு அதிகமாயிருந்த போதிலும்—உபயோகமற்ற கற்களை விலையுயர்ந்தவைகளாக்க எக்காலத்திலும் முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று விடையிறுத்தார்.

நண்பர்களே! நீங்களும் அந்த அன்னம்மாளைப்போலிருக்கிறீர்களா? உங்கள் மத சம்பந்தமான நம்பிக்கைகளைப் பொய்யென்று நிரூபித்துவிட்டால் என் செய்வதென்ற பயத்தால் அவைகளைச் சோதிப்பதற்கு (ஆராய்ந்து பாரப்பதற்கு) மறுக்கின்றீர்களா? அப்படியானால் நீங்கள் நம்பிக்கொண்டேயிருக்க வேண்டியதுதான். ஆனால் எவ்வளவு மனதார (உண்மையாக) விரும்பினாலும், உங்கள் நம்பிக்கை கற்பனைகளையும், பொய்ப் புராணங்களையும் உண்மையானவைகளாக்க முடியாதென்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுவீர்களாக.

மேலே சொன்ன அன்னத்தின் நம்பிக்கையும் உங்கள் மத சம்மந்தமான நம்பிக்கையும் விரோதமானதல்ல. அன்னம் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டாள்; எனினும அவளுடைய ஏமாற்றம் மற்றவர்களுக்கு யாதொரு கெடுதலும் செய்திருக்காது. ஆனால் இத்தனை நூற்றாண்டுகளாக மத சம்பந்தமான நம்பிக்கைகள் கணக்கிடமுடியாத, சொல்லிமுடியாத, அவசியமில்லாத கொடுமைகளுக்கும், துன்பங்களுக்கும் காரணமாயிருந்து வருகிறது. நம்மில் ஒருவரும் எல்லாவற்றிற்கும் மேலான 'கடவுள்" என்பவரிருக்கிறார் என்று நிச்சயமாக எடுத்துக் காட்டக் கூடிய நிலையில்

இல்லை. அப்படிப்பட்ட "கடவுளு"க்கு நம்முடைய புகழ்ச்சி யோ, ஆராதனைகளோ தேவையாயிருக்காதென்பதுதான் அவரைப்பற்றி நமக்குத் தெரிந்தது. ஆகவே நமது வல்லமை, அன்பு, இரக்கம் முதலியவைகளை, அவை தேவையாக உள்ளவர்களும் அனுபவித்துச் சந்தோஷப் படக்கூடியவர்களுமான நமது சகோதரர்களுக்காகச் செலவிடுவோமாக!

இயற்கையின் தத்துவங்களையும் வழிகளையும் ஜபத்தினாலும், தபத்தினாலும், பிரார்த்தனையினாலும் எதிர் பார்ப்பது வீண். மனிதர்கள் செய்யக்கூடிய நற்காரியங்களுக்கோர் எல்லையில்லை. உங்களுக்குச் சரியென்று தோன்றாவிடில் உங்களுக்குச் சரியென்று தோன்றுகிற உண்மைகளைத் தைரியமாக வெளியிடுங்கள். அப்படிச் செய்யாவிடில் நீங்கள் அயோக்கியர்களென்றுதான் சொல்லவேண்டும்.

பாஷை உண்டான விதம்.

மக்கள் பேசும் பாஷை எவ்வாறு உண்டாயிற்று என்று ஆராய்ந்தால் முற்காலத்தில் நமது மிருக முன்னோர்கள் செய்து வந்த கூச்சல்களே பேசும்மொழிகளாகமாறி வந்தன என்ற தீர்மானித்துக்கு வரமுடியும். இக்காலத்தில் உலகில் பரவியுள்ள பலவேறு மொழிகளின் சொற்களும், சிற்சில மொழிகளின் பகுதி (Roots) களிலிருந்தே தோன்றி இருக்கின்றன என்பதை பாஷைகளின் பிறப்பைப்பற்றி ஆராய்ச்சிக்காரர்களால் எழுதப்பட்டிருக்கும் நூல்களில் படித்தறியலாம்.

உண்மை இவ்வாறிருக்க, பாஷை "கடவுள்" சக்தியினால் உண்டானதென்று கதைகள் கூறுவதும், அதைக் காலத்திற்கு ஏற்றவாறு திருத்தியமைப்பது முடியாத காரியம் என்று சொல்லுவதும், திருத்தியமைக்க முயல்வோரைத்தடை செய்யமுன் வருவதும ஆராய்ச்சியற்ற தன்மையிலிருந்து எழுந்த முரட்டுப்பிடிவாதமே யாகும்.

கமலாவின் தைரியம்.

(S. C. பரன்)

ஆ! என்ன கொடுமை! இந்தப் பாழும் சமூகத்திலா நான் பிறக்கவேண்டும்? கொஞ்சமும் நெஞ்சிரக்கமில்லாத சமூகம்! பழக்கம் வழக்கம் என்னும் இருப்புச் சங்கிலியால் கட்டுண்டு கிடக்கும் சமூகம்! இந்த அக்கிரமச் சமூகத்தில் பிறந்தேனே நான். என் பெற்றோர் செய்யும் கொடுமையோ பெருங்கொடுமை. பாவம்! அவர்கள்தான் என்ன செய்வார்கள்.

என் தந்தை எல்லாக் கலைகளையும் கற்றவர்தான்! உலக வியவகாரங்களை அறிந்தவர்தான். ஆனால் அவர்தான் என்ன செய்வார்! பரிதாபம்! என்னைப் பார்க்கும்போதெல்லாம் கண்ணீர் விடுகின்றார். நெஞ்சங் குமுறுகிறார். என் தாயும் அல்லும் பகலும் என்னைக் காணும்போதெல்லாம் வருந்துகின்றாள்! அவளுந்தான் என்ன செய்வாள். என் விருப்பப்படி நடந்துகொண்டால் அண்டை அயலார் நிந்திப்பார்களே என்ற பயம்; ஜாதிக் கட்டுப்பாடு செய்வார்களே என்ற அச்சம்.

எனது சகோதரனுக்கு மணம் ஆகிவிட்டது. அவனும் சுந்தரியும் கொஞ்சிக் குலாவுகிறார்கள்; ஆனந்த வாழ்வை அனுபவிக்கிறார்கள். சுந்தரிக்கும் எனக்கும் வயதும் ஒன்றே: அவளைக் காட்டிலும் நான் அழகில் குறைந்தவளா? சரீர திடத்தில் குறைந்தவளா? அறிவில், உணர்ச்சியில் குறைந்தவளா? நான் மாத்திரம் ஏன் மூலையில் உழைந்து வாடிக் கிடக்கவேண்டும்?

ஐயோ! நம்முடைய உணர்ச்சியைத் திருட்டுத்தனமாகத் தீர்த்துக் கொள்ளவேண்டியிருக்கிறதே. எத்தனை நாளைக்கு இந்த மானங்கெட்ட வாழ்வு! சீ என்ன வாழ்வு! ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்! இவ்வாழ்வை விட இறப்பதேமேல்!

என்ற வார்த்தைகள் கமலாவின் வாயிலிருந்து நின்று நின்று மெதுவாக ஒலித்துக்கொண்டிருந்தன.

அவள் இருந்தவிடம் வீட்டின் பின்புறம்; கிணற்றங்கரை. சுற்றிலும் அழகிய பூஞ்செடிகள்; மெல்லென வீசும் தென்றற் காற்று; மாலை மணி $5\frac{1}{2}$. மஞ்சள் வெய்யலின் கதிர்கள் அங்குள்ள பூஞ்செடிகளின் இடையே தங்கக்கம்பிகள் போல் பிரகாசிக்கின்றன. கமலாவின் உடம்பில் நகைகள் ஏறிக் கொண்டு அழகு செய்யாவிட்டாலும், இயற்கையிலேயே சிவப்பு நிறம் வாய்ந்தவள்; அழகு பொருந்தியவள்; அழகுக்கு அழகு செய்தது போல் அவள் உடம்பின்மேலும் சூரியனுடைய மஞ்சள் கதிர்கள் படிந்திருக்கின்றன.

இச்சமயத்தில், அவள் செல்வன் வெகு வேகமாக ஓடி வந்தான். அவள்மீது ஏறி விழுந்து விளையாடினான். அவளும் தனது துக்கம் சிறிது மாறிச் செல்வனுடன் விளையாடினாள். மழை விட்டாலும் துவானம் விடுவதில்லை என்பது உண்மையல்லவா. ஆதலால் அவள் மனத்துயரத்தின் தூவானம் சிறிது வெளிப்படத் தொடங்கியது. அவள்:- "அடா செல்வா! உனக்கு நான் என்ன நன்றி செய்யப்போகின்றேன். நான் ஒரு பாவி, என் தனிமையைக்கண்டு இரங்குவார் யார்? என்னுடன் உல்லாசமாக விளையாட உன்னையன்றி வேறு யார் இருக்கின்றார்கள்? நீ ஒருவன்தான் ஒவ்வொரு நாளும் என்னைக் கொஞ்சநேரமாவது சந்தோஷத்தில் இருக்கும்படி செய்கின்றாய்! உனக்குள்ள இரக்கம்—தயை தாட்சண்யம் கூட இந்தப் பாழும் மனிதர்களிடம் இல்லையே! நீ வேறு ஜாதி, நான் வேறு ஜாதி, ஆனாலும் என்னிடம் உன் அன்பு குறைவதில்லை. வாய்ப் பேச்சு ஒன்றுதான் உன்னிடம் இல்லை, ஆனாலும் உன் அபிப்பிராயங்களையெல்லாம் என்னிடம் தெரிவித்துவிடுகின்றாய். பேசும் சக்தியும் உனக்கு இருந்துவிட்டால்—உன் இனத்திற்கு இருந்து விட்டால், மனித சமூகமே உன் இனத்துடன் ஐக்கியமாகிவிடும் என்பதில் ஐயமில்லை. உனக்கிருக்கும் அழகு—கவரும் சக்தி வேறு யாருக்குண்டு?"

என்று சொல்லிக்கொண்டு அவன் முகத்தைத் தடவிக் கொடுத்தாள். இவள் கண்களிலிருந்து சில முத்துக்கள் அவன் உடலின்மீது சிந்தின. அதை அவள் தன் கரத்தினால் தேடி எடுப்பது போல அவன் முதுகைத் தடவிக்கொண்டே இருந்தாள். அவனும் வாலையாட்டித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தான்.

இச்சமயத்தில் "கமலா" என்ற ஒரு குரல் கேட்டது. உடனே அவள் வீட்டிற்குள் சென்றுவிட்டாள்.

II

ராமநாத சாஸ்திரியார் டிப்டி கலெக்டராக இருந்து பென் ஷன் பெற்றவர். இப்பொழுது மாயவரம் மகாதானத்தெரு வில் ஒருபெரிய வீட்டில் வசிக்கிறார். நாகரீகம் அறிந்தவர். உலகநிலையை உணர்ந்தவர். வாலிபத்தில், கலாசாலைப் படிப் புக்காலத்தில் சீர்திருத்த விஷயங்களைப்பற்றி அடிக்கடி விவா திப்பார். ஜாதிபேதங்கள் ஒழியவேண்டும்; பெண்களுக்கு விடுதலை வேண்டும்; விதவைகளை மணம் செய்து கொடுக்க வேண்டும்; பால்ய விவாஹம் செய்தல் கூடாது; என்றெல் லாம் பேசுவார். அவருக்குக்கல்யாணம் ஆனபிறகுங்கூட இவ் வாறு பேசிக்கொண்டிருந்தார். அவருடைய மகன் கோபாலன் பிறந்தபிறகு கூட இந்தக்கொள்கையை விட்டுவிடவில்லை. கமலாபிறந்து 10-வயது வரையிலும் கூட இக்கொள்கையைப் பேசிக்கொண்டுதான் இருந்தார்.

இவருடைய மாமனார் சிவராம சாஸ்திரிகள் பெரிய வை தீகர். இந்தப்பேச்சுகளைக்காதில் கேட்டாலே பாவம் என்று காதுகளைப் பொத்திக்கொள்ளுவார். இவருடைய மகளும், ராமநாத சாஸ்திரிகளின் மனைவியுமாகிய ஜானகியம்மாளும் ஏறக்குறைய தந்தையின் குணத்தையே உடையவள். ராமநாத சாஸ்திரியார் மணஞ்செய்து கொண்ட நாள்முதல் ஜானகியை த்தன் வழிக்குத்திருப்ப எவ்வளவோ முயன்று பார்த்தார். அவர் செய்த உபதேசம் எல்லாம் பாழ். விழலுக்கிறைத்த நீர். செவிடன் காதில் ஊதிய சங்கு. அவள் காதில் ஏறவே இல்லை கத்திக்கத்தி ராமநாத சாஸ்திரியின் தொண்டை தான் வலித்ததே அல்லாமல் வேறுபயன் இல்லை.

கமலாவுக்கு வயது 10-முடிந்தது. 11-ஆரம்பமாயிற்று. தாயும், பாட்டனாரும், பாட்டியும் எப்படியும் கல்யாணம் செய்து விடவேண்டும் என்று அவசரப்பட்டனர். ராமநாதர் எவ்வளவோ சொல்லியும், தடுத்தும் பலிக்கவில்லை. கடைசி யில் 11 வது வயது ஆரம்பத்தில் கமலாவுக்கு ஒரு பொம் மைக்கல்யாணம் சகல பூர்வீக சம்பிரதாயங்களுடன் நடந்தே றியது.

மாப்பிள்ளை சென்னையில் பிரசிடென்சி கல்லூரியில் இண்டர் மிடியேட் வாசித்துக்கொண்டிருந்தான். கல்யாண மான மறு வருஷம் காலராவில் மாண்டான். இச்செய்தி கேட்டவுடன் ராமநாத சாஸ்திரியும், அவர் குடும்பத்தினரும்

அடித்துக்கொண்டு அழுதனர். பாவம்! கமலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. கல்யாண நாளில் ஏதோ விளையாட்டு என்று நினைத்துக்கொண்டு குதூகலமாக இருந்தாள். இன்று எல்லோரும் அழுவதைப்பார்த்து தானும் அழுதாள். அவ்வளவுதான்.

அதன் பிறகு சுமார் ஐந்தாண்டுகள் கழிந்தன. இப்பொழுது வயது 16 கமலாவுக்கு. தங்கப்பதுமைபோல் ஜொலிக்கின்றாள். காதல் திரைக்குள் அகப்பட்டுக்கொண்டு திக்குமுக்காடுகின்றாள். உலக இன்ப உணர்ச்சியில் திளைக்கத் தவித்து நிற்கின்றாள். இந்நிலையில் அடுத்ததெரு செல்வநாதனுக்கும் கமலாவுக்கும் எப்படியோ நட்பு ஏற்பட்டது. இருவரும் பால்ய சிநேகிதர்கள்; கொஞ்சநாள் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்தவர்கள்.

அன்று மாலை அவள் கிணற்றங்கரையில் தானாகப்பேசிக்கொண்டிருந்த விஷயம் அவள் தந்தைக்குத் தெரிந்து விட்டது. அவள் முனகிக்கொண்டிருந்த போது கூப்பிட்டது அவள் தந்தையே. அன்றிரவே, அவரும், கமலாவின் தாயும், அவர்கள் சாதிக்குரிய சடங்குகளைத் தவறாமல் கமலாவிஷயத்தில் தாமதமல்லாமல் செய்து முடிக்கவேண்டும் என்றும் தீர்மானித்து விட்டார்கள். இதுசம்பந்தமாகவே இரவு ''குசுகுசு என்று இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

III

மறுநாள், இரவு மணி 12. முதல் நாள் கமலா துக்கப்பட்டுக்கொண்டிருந்த கிணற்றங்கரை. சந்திரன் பூரணமாகப் பிரகாசிக்கின்றான். பூக்களின் மணம் கம்மென்று பரிமளிக்கின்றது. கமலா கிணற்றின் கைப்பிடி சுவரின்மேல் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றாள். முகத்தில் பெருந்துக்கமும், சிறு மகிழ்ச்சியும் மாறி மாறித் தோன்றிக்கொண்டிருக்கின்றன. நிசப்தம், அமைதி, குடிகொண்டிருக்கிறது.

கமலா ஏதோ யோசனை செய்துகொண்டிருந்தாள். பக்கத்தில் வந்து நின்றான் செல்வநாதன். அவனை அவள் கவனிக்கவில்லை. மெதுவாகத் தோளின்மீது கைபோட்டான். திடுக்கிட்டெழுந்தாள் கமலா. இருவருந்தழுவினர். உலகை மறந்தனர். சிறிதுநேரம் சென்றபின் செல்வநாதன்:—

கண்ணே! கமலா? ஏன் இன்று ஒருவிதமாக இருக்கிறாய், என்ன வருத்தம், பக்கத்தில் உள்ள மலர்களைக்கூட இன்று எடுத்துக் கூந்தலில் அணிய வில்லையே ஏன்?

கமலா:— இன்றோடு நமது கள்ளத்தனமான இன்ப வாழ்வு மு................ என்று முழு வார்த்தையை முடிப்பதற்குள்ளேயே கண்ணீர் விட்டாள். செல்வநாதன் அவள் கண்ணீரைத் துடைத்து:—

கமலா, என்ன இது? இத்தனை நாளும் இல்லாத சங்கதி? பயப்படாமலும், வருந்தாமலும் சொல். நமது கள்ளத்தனமான இன்ப வாழ்வை வெளிப்படையான இன்ப வாழ்வாகச் செய்து விடுகிறேன்.

கமலா:— ஓ! அது முடியாது. இனி இன்றோடு நமது இன்பத்துக்கு முடிவுதான். நாளையேஎனக்கு மொட்டையடித்து வெள்ளைப்புடவை உடுத்தப்போகின்றார்கள். எங்கள் சொந்தக்காரர்கள் எல்லாம் எங்கள் குடும்பத்தைப் பழிக்கிறார்களாம். என்னை இப்படி வைத்திருப்பது எங்கள் குடும்பத்தாருக்கு அவமானமாயிருக்கிறதாம்.

செல்வன் கமலா! ஆ! நீயும் இதற்குச் சம்மதிக்கவா போகிறாய்? நாம் இதற்கு முன் பேசியதை எல்லாம் மறந்தாயா? உன்னுடைய சுதந்தர உணர்ச்சி எங்கே பறந்தது? கண்ணே! வேண்டாம்! என்னைத் துன்பத்துக்கு ஆளாக்காதே! உன் இளகிய மனதைக் குழப்பப் படுகுழியில் தள்ளி விடாதே! தைரியங்கொள்! உன் அறிவை உபயோகப்படுத்து. பழய வாக்குறுதிகளை தயவு செய்து நினைத்துப்பார்.

கமலா:—ஐயோ! நான் என்ன செய்வேன். ஊரார் பழிச்சொல்; கொடும் சாதிபேதம்; வழக்கத்துக்கு விரோதம்; சித்திரவதை செய்யும் சமூகக் கொடுமை; பெற்றோர்களின் கோழைத்தனம்; இவைகள் என் மனத்தைக் குழப்புகின்றன. தங்களுக்கும் இந்தக் குழப்பம் இருக்கும் என்றே நினைக்கின்றேன்.

செல்வன்:—“கமலா! என்ன ஒன்றும் விஷயம் அறியாதவள்போல் பேசுகிறாய்! ஊரார் பழிச்சொல்லுக்கு அஞ்சினால் என்ன காரியம் முடியும்? நல்லதையும் பழிக்க ஊரார் உண்டு;

கெட்டதையும் பழிக்க ஊரார் உண்டு; அதற்கு அஞ்சலாமா? அறிஞர் ஒப்புக்கொள்வதைத் துணிந்து செய்வதே அறிவாகும்; ஆண்மை யாகும்.

அர்த்தமற்ற ஜாதிபேதம்! உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நமக்குள் அன்பில்லையா? நமது அன்பிலிருந்து இன்பம் பிறக்கவில்லையா? அந்த இன்ப வெள்ளத்தில் நாம் நீந்திவிளையாடவில்லையா? எந்தச்சாதிபேதம் நம்மைத்தடை செய்துவிட்டது. காதலுக்குமுன் ஜாதியேது? மதமேது? தடையேது? நமது மனம் ஒன்றுபட்டு விட்டது. உனது பிராமண சாதியும், எனது வெள்ளாழச் சாதியும், அன்றே மறைந்துவிட்டது.

பழக்கம்! என்னபழக்கம் வேண்டியிருக்கிறது? வஞ்சகர்கள் செய்து வைத்த வலை! அதிலா நாமும் சிக்கிக்கொண்டு திண்டாடுவது? ஆணுக்கொரு நீதி! பெண்ணுக்கொரு நீதி! என்ன அநியாயம்!

கண்ணே! இவ்வளவு நாள் சுமார் ஒரு ஆண்டாகப்பழகியுமா இன்னும் கோழைத்தனம்? தைரியமாக இப்பொழுதே விடுதலை பெறத்துணிந்து நில்! நீ அல்லற்படும் பெண்களுக்கு வழிகாட்டியாக நில்! உன்னால், உன் செய்கையால், காதல் கலப்பு மணம் பெருக வழி உண்டாகட்டும். விதவை மணத்துக்கு விதையூன்றுவதாக இருக்கட்டும். பால்ய மணம் பாழாகட்டும். குருட்டுத்தனத்தில் பிடிவாதமுள்ள பெற்றோர்களுக்குப் புத்தி வரட்டும்.''

இதைக்கேட்டதும், சிறிதுநேரம் பேசாமல் நின்றாள் கமலா. அவள் தலை குனிந்தது. முகத்தில் ஒருவித ஜோதியுண்டாயிற்று. சந்திர வெளிச்சத்தில் அவளுடைய புன் சிரிப்பும் மின்மினிபோல் பிரகாசித்தது. விடுதலை உணர்ச்சி பெற்றவளானாள். செல்வன் மார்பின்மீது சாய்ந்தாள்.

IV

பொழுது விடிந்தது, ராமநாத சாஸ்திரியின் முகத்தில் ஈ ஆடவில்லை. என்றுமில்லாத துக்கக்குறி. எழுந்து திண்ணைக்கு வந்தார். அம்பட்டன் கத்திப்பையுடன் வந்து கும்பிட்டு நின்றான். சாஸ்திரியார் உள்ளே போனார். ''அடியே! எங்கே கமலா? எழுந்துவிட்டாளா?'' என்று ஜானகியைக் கேட்டார்.

ஜானகி, கமலாவின் படுக்கையைப் போய்ப் பார்த்தாள்; காணவில்லை. கொல்லைப்பக்கம் போயிருப்பாள் என்று

நினைத்துச் சிறிது நேரம் பொறுத்திருந்தாள். வரவில்லை. பிறகு கொல்லைப்புறம் போய்ப்பார்த்தாள். அங்கும் இல்லை. உடனே கூப்பிட்டுப்பார்த்தாள், ஏனென்ற குரலைக் கேட்க வில்லை.

கமலாவைக் காணவில்லை என்ற செய்தி சாஸ்திரியார் காதில் விழுந்தது. அவர் மகன் கோபாலன் காதுக்கு எட் டிற்று. சொந்தக்காரர்கள் கேள்விபட்டனர். தெருவாருக்குத் தெரிந்தது. ஊரார் உணர்ந்தனர். எங்கும் இதே பேச்சு.

ராமநாத சாஸ்திரியார் வீட்டில் ஏகக்கூட்டம். தலைக் குத் தலை வேறு வேறு பேச்சு. பால்ய விதவை என்ன செய்வாள் பாவம் என்றனர் சிலர். ஐயோ பரிதாபம், அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்திருந்தால் என்ன குடிமுழுகிப்போய்விடும் என்றனர் சிலர். எந்த ஆற்றில் விழுந் தாளோ! எந்தக் குளத்தில் விழுந்தாளோ! என்று வருந்தி னர் சிலர். யாரோடாவது சேர்ந்து ஓடிவிட்டாளோ! என்ற னர் சிலர். "பெண்களைப் படிக்கவைப்பதே மகா கெடுதி. கமலா படிக்காதவளாக இருந்தால் சிவனே என்று தன் தலை விதியை நினைத்துக்கொண்டு வீட்டில் கிடந்திருப்பாளே! அவள் கொஞ்சம் படித்திருந்ததனாலல்லவா இவ்வளவு தைரி யமாக வெளியேறியிருக்கின்றாள்" என்று சில வைதீகர் பேசி க்கொண்டனர்.

இம்மாதிரி அன்று பொழுது முழுதும் கழிந்தது. ராம நாத சாஸ்திரிக்கும், அவர் மனைவி ஜானகிக்கும் அளவு கடந்த துக்கம்; அவமானமும் கூட. ஆனல் கோபாலன் மாத் திரம் உள்ளுக்குள் சந்தோஷமடைந்தான். வெளியில் மாத் திரம் வருத்தம் போலக் காட்டிக்கொண்டிருந்தான். அவனு க்குக் கொஞ்சம் சங்கதி தெரியும். செல்வநாதனும் அவனும் ஒரு சாலை மாணாக்கர்கள்.

மறு நாள் காலை மணி 8-ஆயிற்று. கோபாலன் தனது அறையில் ஏதோ படித்துக்கொண்டிருந்தான். ராமநாத சாஸ்திரி திண்ணையில் துக்கத்துடன் உட்கார்ந்திருந்தார். தபால்காரன் வந்தான். கடிதத்தைக் நீட்டினான். சாஸ்திரி யார் அதை வாங்கிப் பார்த்தார். மேலே திருச்சி என்று முத் திரை இடப்பட்டிருந்தது. உறையைப் பிரித்தார்; கடிதத் தைப் படித்தார். அந்தக்கடிதம் பின் வருமாறு எழுதப்பட் டிருக்கிறது:—

புரோகித மறுப்புச் சங்கம், திருச்சி.
1?—4—1935.

அன்புள்ள தந்தையே வணக்கம். என் பிரியமுள்ள அன்னைக்கும், அண்ணாவுக்கும் எனது வணக்கம் தெரிவியுங்கள். நான் இளமைமுதல் இதுவரையில் அடைந்த துன்பம் யாவும நீங்கள் நேரில் அறிந்ததே. என்னுடைய துயரைக்கண்டு, நீங்களும், அன்னையும், அண்ணாவும் அடிக்கடி வருந்தினாலும் என்னைச் சமாதானப்படுத்த முடியாதவர்களாக இருந்தீர்கள். கடைசியாக நமது ஜாதிக்குரிய சடங்குகளையும் செய்யத்துணிந்து விட்டீர்கள். நான் தைரியமாக வெளியேறாமலிருந்தால் எனது வாழ்வுமுழுதும் அவலமாகவே முடியும். நீங்களும் கண்ணீரும் கம்பலையுமாகவே யிருப்பீர்கள்! நானும் துக்கத்தால் புழுங்கியே சா?வன். ஊரார் சிரிக்கத்தக்க பழி, அவதூறு வந்தாலும் வந்திருக்கும்,

இதற்குக் காரணம், பாழும் சாதி, மதம், பழக்க வழக்கம், மூடநம்பிக்கை என்பதை அடியாள் கூற வேண்டியதில்லை. என் கருத்தும், செல்வநாதன் கருத்தும் ஒன்று பட்டது. எங்களால் அதைத் தடுக்க முடியவில்லை. இருவரும் இங்குவந்தோம். மேற்படி சங்கத்தின் சார்பில் மணம்புரிந்து கொண்டு ஒருமித்து வாழ்கின்றோம். என்னை உங்கள் வீட்டிற்கு மீண்டும் அழைத்துக் கொள்ளவோ, சேர்த்துக்கொள்ளவோ, நீங்கள் விரும்பினாலும், ஊரார், சுற்றத்தார் எதிர்ப்புக்குப் பயப்படுவீர்கள் என்பதை அறிவேன். என்மீது அன்பிருந்தால் போதும். நான் செய்தது முற்றிலும் சரிஎன்பதே எனது திடமான நம்பிக்கை. என்னைப்போலவே மூலையில் கட்டுண்டு கிடக்கும் கன்னியர்களும், தாங்கள் விடுதலைபெற்று இன்பமடையத் தைரியமாக முன்வரவேண்டும் என்பதும் என் உள்ளத்தில் வலிபெற்றுவருகிற்கும் உறுதியாகும். நான் பிழைசெய்ததாகக் கருதுவீர்களானால் மன்னித்துக்கொள்ளவும். தங்கள் பிரியமுள்ள,

கமலா.

சாஸ்திரியார், இக்கடிதத்தைக் கோபாலனுக்கும் காட்டினார், ஜானகிக்கும் காட்டினார். யாவரும் படித்து ஒருவகையில் மகிழ்ச்சியடைந்தனர். மறுநாள் ஒருவரும் அறியாதபடி கோபாலன் சில சீர்வரிசைகளுடன் திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்றான் என்று கேள்வி.

பண்டிதருக்கு ஆசிரியர் புத்தி எப்பொழுது வரும்?

(கைவல்யம்)

சில தமிழபிமானிகள், பெரிய பண்டிதர்களுக்கு "ஆசிரியர்" என்னும் பட்டத்தைக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானஞ் செய்து, கம்ப ராமாயணக் கவியின்பத்தைக் கண்டு கொண்டிருக்கும் பண்டிதர்களுக்கு, ஆசிரியர் என்கிற பட்டத்தைக் கொடுத்துப் பெருமைபாராட்டிக் கொள்ளுகிறார்கள்.

ஆசிரியர் பட்டமோ, அதற்கு மேற்பட்ட பட்டமோ, பதவியோ அதற்குத் தகுந்த வருவாயோ அடைவதிலும், அனுபவிப்பதிலும், பகுத்தறிவுச் சங்கத்திற்கு அதிருப்தியோ அசூயையோ ஏறிதுமில்லை பண்டிதன், புலவன், வித்வான், கவிவாணன், ஆசிரியன் என்கிற எந்தப்பட்டமுடையவர்களாயிருந்தாலும் அவர்கள் பாஷையையும் பெருமையையும் குறைத்துக் கூறப் பகுத்தறிவு இயக்கம் தோன்றினதல்லவென்பதைத் தமிழ்ப் படித்தவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன்.

பண்டிதர்கள் படித்த சாஸ்திரங்களும், அதன் சமய வழக்கங்களும், சமூகத்தை அடிமைகளாக்கி, அறிவைத் தடுத்து, பார்ப்பான் புரட்டைப் பாட்டாகப்பாடி, பரமசிவனே பாடியும், பாடவைத்தும் சென்றார் என்னும் மூட நம்பிக்கையை உண்டாக்குவதானால், அந்த அறியாமை அகன்று போக வேண்டுமென்றே பகுத்தறிவு இயக்கம் சொல்லுகிறது. இதைக்கேட்ட சில பண்டிதர்கள் கோபித்துப் பகுத்தறிவு இயக்கத்தைக் கருவறுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டதாகச் சொல்லுகிறார்கள். உலகப் பொது விதியையும் பொதுத் தெய்வக் கட்டளையையும் உலக அறிவின் போக்கையும் உணர்ந்த பண்டிதர்கள் அவ்விதம் நினையாமல் உண்மைக்கு உபகரிப்பதையும் பார்க்கிறோம்.

சமய உண்மையை, சமயஸ்தாபனங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராயலாகாது என்றும், சமயங்களிலுள்ள ஆச்சாரிகளின் வாழ்க்கையைக் கொண்டே சமயத்தை ஆராயவேண்டுமென்றும் சொல்லும் பண்டிதர்கள் கூட, நூதன அறிவு

களைச் சமூகம் பெறமுடியாதபடி சமயம் தடுப்பதால் ஜனங்களுக்குத் துன்பம் அதிகரிக்கும்படி செய்கிறதென்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்து சமயத்தின் பெயரால் எவ்வளவோ அநியாயங்களும், சமத்துவமின்மைகளும், மூடப் பழக்க வழக்கங்களும், அமுலில் இருக்கின்றதென்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். குற்றங்குறையற்றதாயும், மனிதர்களின் சுதந்திர இன்பத்தைப் பெருக்கக்கூடியதாகவும், சமயமிருக்கவேண்டுமென்று உலகம் நினைப்பது போலவே, சமயவாதிகளும் ஆச்சாரிய பரம்பரைகளும் போய்க்கொண்டுமிருக்கிறார்கள். இப்படியிருக்கையில் பகுத்தறிவு இயக்கத்தை ஒழித்துவிட வேண்டுமென்று ஒரு சில பண்டிதர்கள் நினைப்பதும் சொல்வதும் சிறிதுகூட நியாயத்திற்குப் பொருந்தவில்லை.

பகுத்தறிவு இயக்கத்தைக் கருவறுக்கக் கங்கணம் கட்டுகிறேன்; என்னுடைய சிஷ்யர்களைக்கொண்டு அதை அழித்துவிடுகிறேன்; என்று சொல்லும் குற்றமானது அவர்கள் விசாரித்தறியும் புத்தியில், படித்த சாஸ்திர உண்மையில், வணங்கும் பொதுத் தெய்வ நியமத்தில், சேர்ந்திருக்க வில்லை. அவர்களுடைய குறுகிய இரக்கமற்ற குணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. தன் சமயத்தில் சேராத எண்ணாயிரம் பேர்களை இரக்கமற்ற கழுவில் போட்ட கதைகளைக் கையெடுத்துக் கும்பிட்டு, அதுவே அவர்கள் தெய்வத்திற்கும் ஆச்சாரிகளுக்கும் பெருமையென்று கோவிலில் சித்திரமெழுதிப் புராணத்தில் படம் போட்டுத்திருநாள் கொண்டாடும் இவர்களுக்கு இரக்கம் எங்கிருந்து வரும்? இவர்களே நிதானமாகப் பார்த்தால் மனிதனுக்குள்ள பயம் காரணமாகவே அப்பயத்தினின்று விடுதலையடைய சமயமேற்பட்டதென்னும் சமய உண்மையையும், அச்சமற்றவர்கள் கடவுள் நம்பிக்கையில் குறைந்தவர்களாகவே யிருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுவார்கள். கட்டுப்பாடான சமயம் மானிட கோடிகளின் இன்ப வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாக விருப்பதால் எல்லோரும் சமயக் கட்டுப்பாட்டை ஒழிக்கவேண்டுமென்று உலகமேதாவிகள் சொல்லவும், அதன்பின் உலகம் ஓடிக்கொண்டும், ஓடப்புறப்பட்டுக்கொண்டுமிருக்கிறது. அந்த உலகத்திலிருக்கும் இந்தப் பண்டிதனும் தன்னையறியாமலே அதன் பின்னே நகர்ந்து கொண்டுமிருக்கிறான். பகுத்தறிவு இயக்கமோ அதற்குள் புகுந்து விட்டது. அப்படியிருக்கையில் அதை எங்கே தேடி எங்கேயிருந்துகொண்டு அழிப்பது?

ராஜாக்களின் உதவியால் பார்ப்பனரின் சடங்குகள் பல நிலை நிறுத்தப்பட்டன. அதைப் பரப்பினவர்கள் தமிழ் வித்வான்கள். அவைகளைப் பரப்புவதற்கு ஏதுவாகவிருந்தது புராணக் கதைகள். அந்தப் புராணக் கதைகளையே பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடமாக வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அந்தப் புராணக் கதைகளையும், அசுற்கு மத்தியில் மற்றும் சில கதைகளையும் சேர்த்தெழுதி, சிறு புஸ்தகமாகப் போட்டு, அவரவர்கள் புஸ்தகங்கள் விலையாவதற்கு வேண்டிய பிரயத்தனங்களும் செய்து, பல புஸ்தகங்களைப்பள்ளியில் பாடமாகவும் வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பின்னால் தெரியப்படுத்துகிறேன்.

ஆசிரியர் ஸ்தானம் வகிக்கிறவனுக்கு அந்தப் புத்தியாகாது. அந்தப் புத்தியிருந்தால் பிள்ளைகளுக்குப் பொது எண்ணங்கள், உண்மையறிவுகள் உண்டாகாது. மோக்ஷத்தை உபதேசிக்கும் ஆச்சாரித்துவத்தைவிட அறிவையளிக்கும் ஆசிரிய பதவி உயர்ந்ததாகும். ஏனெனில்? அறிவைக் கொடுப்பவன் ஆசிரியன். எல்லாம் அறிவிலிருந்துதான் உண்டாகவேண்டும். அந்தப் பெரிய அறிவை, பண்டிதர்கள் புராண மூலமாகவே இதுவரையிலும் கற்றுக்கொடுத்தார்கள். அந்தப்புராணப் படிப்பு பிழைப்பைக் கொடுக்கவில்லை. புத்திக்கு யோக்கியதை உண்டுபண்ணவில்லை. இந்தக் காலத்துப் பல தேசப் படிப்புகளுக்கு இணையாகவில்லை.

ஆசிரியர் பட்டம் வைத்துக்கொண்டால் மற்ற இங்கிலீஷ் ஆசிரியர்களுடன் சமமெனக் கருதப் படுவார்களென்று நினைப்பதற்கு ஏது உண்டாகுமென்று ஆசிரியர் பட்டத்தை விரும்புவது போலவே, ஆசிரியர் பட்டம் ஏற்றுக்கொள்ளுகிறவர்களும் தாங்கள் புத்தியை உண்மையில் திருத்திக்கொள்ள வேண்டும். ஆசிரியர் ஸ்தானத்தில் அமர வேண்டுமானால் மூட நம்பிக்கையின் முதுகுச் சுமையை முதல் முதல் கூச்சப் படாமல் வீசியெறிந்துவிட வேண்டும். இப்பொழுது சமய சம்பந்தமான விஷயங்களில் எவ்வளவோ பொய் நம்பிக்கைகள் நிரம்பிக் கிடக்கின்றனவென்பதைத் தெரிந்தும், அதை மாணாக்கர்களுக்குக் கற்றுக்கொடுத்து, குழந்தைகள் முதல் அனைவரும் பொய்க் கதைகளை நம்பியே சரியான வாழ்க்கை முறையை அறியவேண்டுமென்கிற பண்டிதப் புத்தி பாழ் பட்டே தீரவேண்டும்.

கம்பர் கவி இன்பச்சுவையைக் கண்டு கொண்டிருப்பது மட்டும் ஆசிரியர் பட்டத்திற்கு அருகதையாய் விடாது. இங்கிலீஷ்பாஷை பட்டம்பெற்றவர் அப்பாஷைகளிலுள்ள இன்பம் நிறைந்த விஷயங்களை எடுத்தெழுதியும் கற்பித்தும் வருவதே அவர் படிப்பிற்கும் ஆசிரியப்பதவிக்கும் மேலானதாகும். கவிச்சுவையும் சொல்லமைப்பும் கவிஞர்களுக்கின்பம் பயக்கக்கூடியதே என்றாலும், கம்பராமாயணக் கவிச்சுவையின் இன்பத்தைப்பல காலமாகக்கண்டு கேட்டுக் களைத்துப்போனோம். கனக மாளிகையை வெறுத்து, கானகம் போந்த காதலரது பெருமையையறிந்த கந்தங்கள் மூலமின்றியேமுளைத்ததும், மிதிலை மங்கையின் கமலபாதம் தோயுமிடமெல்லாம் பூஞ்செடிகளும், கொடிகளும், நிரம்பப்பூத்து நல்லணி புனைந்த மங்கை நல்லாரை நிகர்ப்பனவானதும், பருவத்தாலன்றியே மரங்கள் பழுக்கவும், மூலமின்றியே கிழங்குகள் முகிழ்க்கவும், பேணுவாரின்றியே பூஞ்செடிகள் தழைத்துக்குழைத்து அரும்பி மலர்ந்து அழகுற இலங்கவும், காரணமாய் நின்ற கமலக்கண்ணனது செம்மையைக் கவிஞர் வியந்து உரைக்கும் முறை விழுமியதாகவேயிருக்கட்டும் அந்த மிதிலைமங்கை புரண்ட இடமான இராவணனின் மடியும், மார்பும் சாபத்தை விட்டு புண்ணியத்தைபடைத்து "வைகுண்ட" வாசற் காப்பிற்கே போய்ச் சேர்ந்ததும் இருக்கட்டும்.

முப்பத்தேழு இலட்சம் வருடத்திற்கு முன் சீரடைந்து, இப்பொழுது உழவு கோலெடுப்பதற்குக்கூட உத்தரவு வேண்டிய கானகப்பெருமையை, இங்கிலீஷ் கவிஞர் நினைத்து இன்புறுவதை விட, நமது தேகத்தைச் சுத்தமாகவும், அழகாகவும் அலங்கரித்து வைத்துக் கொண்டிருக்கும் துணியை வெளுத்துக்கொடுக்கும் வண்ணானுக்கு, வெளுக்க மண்ணில்லாமல் அன்னிய நாட்டுக்கவிஞர்கள் அவர்கள் நாட்டு மண்ணை இங்கு அனுப்பி இன்புறுகிறார்கள். அதைக்கொண்டு வண்ணான் நமது ஆடையை வெளுக்கிறான். பி. ஏ. பி. எல் படித்தபண்டிதர் தான் படித்த படிப்பில் கம்பர் கவிச்சுவையை கற்றுக்கொண்டது போலவே ரசாயன சாஸ்திரமும் வந்திருக்குமே. போனது போனாலும் இனிமேலாகிலும் அதில் மனத்தைச்செலுத்தி அந்த மண்ணைப்போன்ற மண்ணையும் நம் மண்ணிலிருந்து செய்து கொடுத்தால் வண்ணானுக்கு, துணிக்கு, நமது நாட்டிற்கு, நமதுநாட்டுப் பொருளுக்கு அவருக்கு இன்னும் எத்தனையோ லாபத்திற்கு ஏதுவாகும்.

சந்தேகக் கேள்விகள், சரியான விடைகள்.

(சித்திரபுத்திரன்.)

வினா:— கிறிஸ்தவனாகப் போவதில் என்ன கெடுதி?

விடை:—ஒரு கெடுதியும் இல்லை; ஆனால் மதத்தின் பெயரால் குடிக்காதே.

*　　　*　　　*

வினா:—மகம்மதியனாவதில் என்ன கெடுதி?

விடை:—ஒரு கெடுதியும் இல்லை; ஆனால் பெண்களுக்கு மூடி போடாதே.

*　　　*　　　*

வினா:—உண்மையான கற்பு எது?

விடை:—தனக்கு இஷ்டப்பட்டவனிடம் இணங்கியிருப்பதே உண்மையான கற்பு.

*　　　*　　　*

வினா:— போலிக் கற்பு என்றால் என்ன?

விடை.— ஊராருக்கோ, சாமிக்கோ, நரகத்திற்கோ, அடிக்கோ, உதைக்கோ, பணத்திற்கோ பயந்து மனதிற்குப் பிடித்தமில்லாதவனுடன் தனக்கு இஷ்டமில்லாத போது இணங்கியிருப்பதே போலிக் கற்பு.

*　　　*　　　*

வினா:— மதம் என்றால் என்ன?

விடை:— இயற்கையுடன் போராடுவதும் அதைக் கட்டுப்படுத்துவதுந்தான் மதம்.

*　　　*　　　*

வினா: பண்டிகை நாட்களில் உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏன் "லீவ்" கொடுக்கப்படுகிறது?

விடை:—பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தில் மீதி வைக்காமல் பாழாக்கிவிடவேண்டும் என்பதற்காகத்தான்.

*　　　*　　　*

வினா:— பெண்களைப் படிக்கக்கூடாதென்று ஏன் கட்டுப்படுத்தினார்கள்?

விடை:— அவர்களுக்கு அறிவு இல்லை; சாமர்த்தியமில்லை; என்று சொல்லிச் சுதந்தரம் கொடாமல் அடிமையாக்குவதற்காகவே.

வினா:— ஒரு மனிதனுக்குக் கவலையும் பொறுப்பும் குறையவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

விடை:— பெண் அடிமையை ஒழித்து அவர்களுக்குக் கல்வியறிவும், முழுச்சுதந்தரமும் கொடுத்துவிட்டால் ஆண்களுக்கு அனேக தொல்லைகள் ஒழியும்.

* * *

வினா:— பெண்களுக்கு வேலை நேரம் மீதியாகவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

விடை:— தலை மயிரை வெட்டிவிட்டால் அதிக நேரம் மீதியாகும்.

* * *

வினா:— பெண்கள் கைக்கு ஓய்வு கொடுக்கவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

விடை:— அவர்களுக்கு ஒரு குப்பாயம் (மேல் சட்டை) போட்டு விட்டால் கைக்கு ஓய்வு கிடைத்துவிடும். (இல்லாவிட்டால் அடிக்கடி மார்புச் சீலையை இழுத்து இழுத்துப் போடுவதே வேலையாகும்.)

* * *

வினா:— பெரிய மூடன் யார்?

விடை:— தனது புத்திக்கும் பிரத்தியட்ச அனுபவத்துக்கும் தோன்றுவதை நம்பாமல், எவனோ ஒருவன் எப்போதோ சொன்னதை நம்பி வாழ்வை நடத்துபவன் பெரிய மூடன்.

* * *

வினா:— ஒழுக்கம் என்பது என்ன?

விடை:— ஒழுக்கம் என்பது தனக்கும் அன்னியனுக்கும் துன்பம் தராமல் நடந்துகொள்ளுவதாகும்.

* * *

வினா:— சமயக்கட்டுப்பாடு, ஜாதிக்கட்டுப்பாடு என்றால் என்ன?

விடை:— மனிதனைத் தன் மனச்சாட்சிப்படியும், உண்மைப்படியும் நேராய் நடக்கவிடாமல் கட்டுப்படுத்துவதுதான் ஜாதி, சமயக்கட்டுப்பாடுகள்.

வினா:—உண்மையான கடவுள் நம்பிக்கை என்றால் என்ன?

விடை:—கடவுள் எங்கு மறைந்து போவாரோ என்று பயந்து, அவரைக் காக்கப் பிரயத்தினம் செய்வதுதான் உண்மையான கடவுள் நம்பிக்கையாகக் காணப்படுகிறது.

* * *

வினா:—ஜனநாயக ஆட்சி யென்றால் என்ன?

விடை:—தடியெடுத்தவன் எல்லாம் தண்டக்காரன் என்பதுதான் ஜனநாயக ஆட்சி.

* * *

வினா:—இந்தியாவில் நல்ல திடகாத்திரம் உள்ள ஜன சங்கியை பெருகவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

விடை:—சிறு பெண்களுக்கு மணம் செய்வதையும், அதிகமாகப்பிள்ளை பெறுவதையும் நிறுத்தி விதவைகளுக்கு மறுமணம் செய்தால் நல்ல திடகாத்திரம் உள்ள ஜன சங்கியை பெருகும்.

* * *

வினா.—இந்தியா சீர்பட என்ன வேண்டும்?

விடை:—இந்தியா சீர்பட்டு, இந்தியர்களும் மனிதர்கள் என்று உலகத்தோர் முன்னிலையில் சிறந்து நிற்க வேண்டுமானால் நாஸ்திகமும், நிபந்தனையற்ற பெண்கள் விடுதலையும் வேண்டியதாகும்.

* * *

வினா:—இந்தியா அடிமையானதற்குக் காரணம் என்ன?

விடை:—இந்தியா கெட்டு நாசமாய் என்றும் விடுபட முடியாத அடிமையாய்ப் போனதற்குக்காரணம் அவர்கள் மதமும் கடவுளுமே முக்கிய காரணமாகும்.

* * *

வினா:—பார்ப்பான் மாத்திரம் எப்படி இவ்வளவு பெரிய பதவிக்கு வர முடிந்தது?

விடை:—மதவிஷயத்தில் அவர்களுக்குக் கிடைத்துள்ள உயர்ந்த நிலையால், அவர்கள் (பார்ப்பார்கள்) எல்லோரையும் விட முன்னேறியிருக்க முடிந்தது. மதவிஷயத்தில் பார்ப்பனர்களுக்குள்ள பெருமை போய்விட்டால் அவர்கள் இழிவான மனிதர்களுக்கும் இழிவான மனிதர்களாகிவிடுவார்கள்.

ஜோஸப் மெக்கேபி.

(அ. இராகவன்)

ஜோஸப் மெக்கேபி லண்டன் பகுத்தறிவுச் சங்கத்தின் பிரதான தலைவர்களில் ஒருவர். அவர் லண்டன் பகுத்தறிவுப் பிரசுர சபையினின்று வெளிவரும் "லிட்டரேரி கைட் (Literary guide) என்ற ஆங்கில மாதப் பத்திரிகையில் பல்லாண்டு ஆசிரியராயிருந்து இப்பொழுது வயது முதிர்ச்சியின் காரணமாய் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் 1867-ல் கத்தோலிக் குடும்பத்தில் பிறந்தார். பின்னர் கத்தோலிக் கல்லூரியில் மேன்செஸ்டரிலும் லண்டனிலும் கல்வி பயின்றார். பின் 1883-ல் கத்தோலிக் குருவாகப் பயிற்சி பெறச் சென்று குருப் பட்டம் பெற்றார். 1890-ல் கிறிஸ்து மத தத்துவஞானப் பேராசிரியராய் நியமிக்கப்பட்டு 1895-ல் பக்கிங்ஹாம் கல்லூரியின் தலைமை ஆசிரியரானார். அவர் கத்தோலிக் குருவாக இருக்கும்பொழுது அவரது பெயர் அந்தோணி (Father Antony) என்பதாகும்.

அவர் பன்னிரண்டு ஆண்டு கத்தோலிக் குருவாக இருந்தார். அம்மதத்திலுள்ள பல்வேறு அரிய நூற்களையெல்லாம் பயின்றதோடு ஏனைய மதக் கிரந்தங்களையும் உலகிலுள்ள பல்வேறு விஞ்ஞான நூற்களையும், பகுத்தறிவுவாதிகளின் அரிய பெரிய நூற்களையும் பத்திரிகைகளையும படித்து கத்தோலிக் குருமார்களில் ஒப்பாரும் மிக்காருமற்ற விற்பன்னராய் விளங்கினார்.

இவர் அறிவிலும், ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கியதைப்போன்று ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது இன்னதென அறியார். உள்ளதை உள்ளவாறு கூறும் உத்தமர். உண்மைக்காக உயிர் விடுவதற்கும் அஞ்சாத அரிய வீரர். அவர் எதைத் தப்பு என்று உணர்கிறாரோ அதைத் தைரியமாய் எடுத்துக் காட்டி அதைத்திருத்துவதற்குத்தன் ஆயுள் உள்ளவரை போராடும சுபாவமுள்ளவர். அதனால் தனக்கு நேரிடும் துன்பங்களையெல்லாம் இன்பமாக நினைத்து வேலை செய்யக்கூடிய அரிய மனப்பான்மையைப் பெற்றவர்.

இத்தகைய நேரிய அறிஞர் கத்தோலிக் மதத்தில் பாதிரிகள் செய்துவரும் அட்டூழியங்களையும், அடக்குமுறைச் சட்டங்களையும் பாவ சங்கீர்த்தனத்தின் பேரால் நடைபெறும் கொடுமைகளையும், பைபிளிலுள்ள குறைபாடுகளையும் கண்டு அவைகளையெல்லாம் திருத்தி அம்மதத்தைப் புனிதப்படுத்த முயன்றார். அம்மதத்திலுள்ள பாதிரிக்கூட்டங்களின் மனப்பான்மை அம்மதத்தை ஒரு அங்குலம் கூடத் திருத்த இடங்கொடுக்கவில்லை. இந்நிலையில் இதர மதங்களையும் அவைகளிலுள்ள அனியாய அக்கிரமங்களையும் மக்களுக்கு மதங்களிழைத்த கேடுகளையும் உன்னினார். விஞ்ஞான சாஸ்திரங்களின் மேன்மையை எண்ணினார். பகுத்தறிவுவாதிகளின் உயரிய லக்ஷியங்களை நினைந்தார்.

1885-ம் வருஷம் பெப்ரவரி-மீ திடீரென்று தமது பாதிரிக்கோலத்தை உதறித் தள்ளிவிட்டு ஓர் அறிவியல்வாதியென்று கூறித்தனது பழைய பெயரை மாற்றிவிட்டு ஜோஸப் மெக்கேபி என்னும்பெயருடன் இதுவரை விளங்கிவருகின்றார். அவர் கத்தோலிக் மதத்தைத் துறந்துவிட்டு வந்ததும் நான் ஏன் திருச்சபையைத்துறந்தேன்? (Why I left the Church) என்று ஒரு சிறிய நூல் எழுதியுள்ளார். அதில், தான் கத்தோலிக் மதத்தினின்று வெளிவந்ததற்குத் தக்க காரணங்களை எடுத்துக்காட்டியுள்ளார். அதன் பின்னர் "மடங்களில் பன்னிரண்டுவருடங்கள்" (Twelve Years in monestry) என்ற புத்தகம் ஒன்று எழுதி அதில் பன்னிரண்டாண்டு தான் குருவாயிருந்த காலத்தில் கத்தோலிக் மதத்தில் கண்ட ஊழல்களை விளக்கியுள்ளார். இவரால் ஆங்கிலத்தில் The Existence of god, The pope & their Church, Can we save Civilization, war & the Churches, Revolt against Religion போன்ற நூற்றுக்கணக்கான நூற்களை எழுதியுள்ளார். பிரஞ்சு ஜெர்மன் பாஷையினின்று பல நூற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இவர் அறிவியக்கப் பிரசாரஞ்செய்ய அமெரிக்கா, அண்டிப்போட்ஸ் ஆகிய நாடுகளுக்குச்சென்று பிரசாரஞ்செய்தார். ஆங்காங்கு கத்தோலிக் குருமார்களாலும், இதர மத பக்தர்களாலும் சொல்லுதற்கடங்கா இடையூறுகள் செய்தும், கேள்விகள் கேட்டும், அரசாங்கத்தின் மூலம் இம்சிக்க முயன்றும் பார்த்தனர். சென்ற சென்ற இடங்களிலெல்லாம் மெக்கேபிக்கு வெற்றியே கிடைத்தது. அவரது புகழ்

உலகமெங்கும் பரவியது. இன்று உலகில் உயிரோடிருக்கும் சிறந்த அறிவியல்வாதிகளில் தோழர் மெக்சேபியும் ஒருவராவர். அவர் பகுத்தறிவியக்கம் உலகமெங்கும் பரவ அரும் பாடுபட்டுள்ளார், அவரது பேச்சு வன்மையையும எழுத்துவன்மையையும் மேனாடு நன்கு தெரிந்திருக்கின்றது. அவரது நூற்கள் ஒவ்வொன்றும் லட்சக்கணக்காய் விற்பனையாவதிலிருந்தே மேனாட்டில் அவருக்கு இருக்கும் புகழ் விளங்கும். இந்திய நாட்டு மக்களும் அவரது நூலை வாங்கிப் படித்துப் பெரிதும் பயனடையவேண்டுமென்பது நமது பேரவாவாகும்.

இவரால் எழுதப் பெற்ற Revolt against Religion என்ற நூலைத்தான் மொழி பெயர்த்து நமது பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம், "மதப்புரட்சி" என்ற பெயருடன் புத்தகமாக வெளியிட்டிருக்கிறது.

இவர் கத்தோலிக் மதத்தை விட்டு வெளிப்போந்ததும் 1886ம் ஹூம் மார்ச்மீ "நமது குழந்தைகள்" (Our children) என்ற ஆங்கிலப்பத்திரிகை "விமஹவுஸ் கலாசாலையிலுள்ள கல்விச்சிறையிலிருந்த பாதிரியாகிய அந்தோணி கத்தோலிக் இராக்ஷதன் மறைந்தார்" என்று எழுதியது.

அவர் தன்னை ஓர் சம்சயவாதி (Agnostic) என்று அழைப்பதை விட லோகாயதவாதி (Materialist) என்று அழைப்பதே சிறந்தது என்றுகூறுகிறார். மதநம்பிக்கையினாலும் கடவுள் நம்பிக்கையினாலும் உலகம் நன்னிலை அடைய முடியாதென்று கூறுகிறார். மதங்களினால் எப்பொழுதாவது மக்கள் ஒழுக்கமுடையவராய் இருந்ததில்லை என்பது அவருடைய உறுதியான எண்ணம் இதைப்பற்றி அவர் "மதத்தின் உதவியில்லாமல் நாம்நாகரீக வாழ்வு நடத்தமுடியாது என்று எண்ணற்ற ஆடவரும் பெண்டிரும் கருதுகிறார்கள். இக்காலத்தில் அமெரிக்காவில் சிலபட்டணங்களிலுள்ள பெரிய சுவர்களில் பல விளம்பரங்களை ஒட்டி பட்டினவாசிகளைக் கோவிலுக்குப்போகும்படி தூண்டுகிறார்கள். படங்கள் மூலம் அவ்விஷயங்கள் காட்டப்பட்டு பிரசாரம் நடைபெறுகிறது. கடவுளற்ற உலகத்தில் தீமையும் பலாத்காரமும் கொடுமையும் ஆதிக்கஞ் செலுத்துவதுபோல படங்களின் மூலம் காட்டி அமெரிக்காவை பயமுறுத்துகிறார்கள். உலகத்தில் இதுவே கிறிஸ்தவர்களின் யதார்த்த நம்பிக்கை."

"அவ்விளம்பரத்தில் உண்மை ஒன்றும் கிடையாது. வால் நட்சத்திரம் ஒன்று, கொள்ளை நோய்க்கும் கொடுந்தீமைக்கும் ஆஸ்பதமான விதைகளைத் தன் நெருப்பு வாலிலிருந்து தெளித்தது என்ற பழையகாலத்து நம்பிக்கைகளுக்கு எவ்வளவு அர்த்தம் உண்டோ அவ்வளவு இதிலும் இருக்கிறது."

"ஒழுக்கச்சட்டமே சமுதாயச்சட்டம், அது சமுதாய வாழ்க்கையின் அவசியத்திற்கேற்ப அமைய வேண்டுமேயன்றி அது மறு உலகத்திற்கு வேண்டியதில்லை. சோவிலுக்குப் போவது குறைந்ததும் அதே அளவிற்குக் குற்றஞ் செய்பவர்களும் குறைந்திருந்த காலமும் இருந்திருக்கிறது."

என்ற மெக்கேபியின் பொன்னுரைகள் எத்துணை ஆராய்ச்சியும் ஆழ்ந்த கருத்துகளையுமுடையதென்று சிந்தித்துப் பார்க்கத்தக்கது.

இவருக்கு இப்பொழுது வயது 68 ஆகிறது; என்றாலும் தளரா ஊக்கத்துடன் மக்களுலகில் அறிவு இயக்கம் வளர்ச்சி பெற அதி தீவிரமாய் உழைத்து வருகிறார். அவரது பணி மென்மேலும் பெரிது ஓங்க அவரது நூற்களை ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பயன் அடைவோமாக.

ஜோஸப் மெக்கேபி வாழ்க!

"ஆரியர்கள் சோமயாகம் முதலியவற்றின் மூலம் தேவதைகளுக்கு மதுவை வைத்துப்பூஜிக்கும் முறைகளும், அதை உற்பத்தி செய்யும் விதங்களும் தங்கள் வேதங்களில் முக்கிய விதிகளாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவற்றையெல்லாம் வெளிப்படுத்தி தேவதைகளுக்கு மதுபானம் அவசியம் என்பதை நம் நாட்டு ஜனங்கள் நம்பும்படி செய்து விட்டார்கள். இவ்வாறு மதசம்பந்தப்படுத்தியதால் தேவதைகளுக்குக் கள்ளை வைத்துப் பூஜித்து அருந்தும் பழக்கம் ஏற்பட்டது."

S. ராமச்சந்திரன், B. A., B. L.,

ஜோஸப் மெக்கேபி.

ஏண்டா படிக்கவில்லை?

ஆசிரியர்.—அடே! கண்ணப்பா! ஏண்டா பாடம் படித்துக்கொண்டு வரவில்லை?

மாணவன்.—நீங்கள் நேற்று சொன்னபடிதான் சார் நான் செய்தேன்;

ஆசிரியர்:—என்னடா சொன்னேன்?

மாணவன்:—நேற்று சொல்லிக்கொடுத்த பாட்டில் உள்ள படி நடந்து கொண்டேன்.

ஆசிரியர்:—என்னபாட்டு?

மாணவன்.—

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா!

என்று சொல்லிக் கொடுத்தீர்கள். அதன்படி ராத்திரி, பால், தேன், சர்க்கரைப்பாகு, முந்திரிப்பருப்பு, எல்லாம் பிள்ளையாருக்கு வைத்துப்படைத்தேன். ஆகையால் பாடம் வராதது என்குற்றம் அல்ல சார்!

ஆசிரியர்:—அடா முட்டாள்பயலே! இது மாத்திரம் போதுமாடா? புஸ்தகத்தைப் பார்த்துப் படித்தால் தாண்டா பாடம் வரும்.

மாணவன்:—புஸ்தகத்தைப் படித்தால்தான் பாடம்வரும் என்றால், பிள்ளையாரை ஏன் சார் கும்பிட வேண்டும்? அவரை வணங்கினால் ஆகாத காரியம் எல்லாம் ஆய்விடும் என்று சொன்னீர்களே! அதெல்லாம் பொய்தானே!

ஆசிரியர்:—சீ அதிகப்பிரசங்கி உட்காரு கீழே.

மதமும் அடிமையும்.

(C. R. D.)

இந்து மதம் நமது மக்களுக்கு அடிமைத் தன்மையையே வளர்த்து வருகின்றது. மக்களை விலங்கினும் கேடானவர்களாக மதிக்கச் செய்கின்றது. மக்களிடம் சிறிதும் இரக்கம் காட்டாமல் அவர்களைத் தீண்டத்தகாதவர்களாகவும், பொது வழிகளில் நடக்கக் கூடாதவர்களாகவும் செய்து வருகின்றது. பொதுக் குளம் கிணறுகளில் தண்ணீர் எடுக்கவிடாமல் தடை செய்கின்றது. மற்ற மக்களுக்கு எதிரில் அவர்கள் நல்ல உடையணிந்துகொண்டும், சட்டை போட்டுக்கொண்டும் காலில் செருப்பணிந்துகொண்டும் போகவிடாமல் நிர்பந்திக்கின்றது. தாழ்த்தப்பட்ட குலத்துப் பெண்களையும் மார்பில் துணி போடக்கூடாதென்றும் தடுக்கின்றது. இக்கொடுமைகளுக்கெல்லாம், இந்து மதமும் இந்து மத வருணாச்சிரம தர்மமுமே காரணம் என்பதை 'சுயமரியாதை இயக்கம்' வெகு நாட்களாக வெளிப்படையாகக் கூறிவருகிறது.

இந்து மதம் எவ்வாறு மக்களை அடிமையாக்கியிருக்கிறதோ அதுபோலவே மற்ற மதங்களும் மக்களை அடிமையாக்குகின்றன என்பதை அறிவாளிகள் மறுக்கமாட்டார்கள். உதாரணமாக, கிறிஸ்துவ மதம் அடிமை வியாபாரத்தைத்தடுக்கவில்லை என்பதை "ரீசன்" என்னும் பகுத்தறிவுச் சங்கப் பத்திரிகையில் வெளி வந்திருக்கும் "மனித வர்க்கத்தின் கொடிய சாபம்" என்னும் கட்டுரையின் மூலம் உணரலாம். அக்கட்டுரை வருமாறு:—

தென் ஆப்பிரிக்காவிலுள்ள கிருஸ்தவாலயங்கள் கொஞ்ச நாளைக்கு முன் அடிமைகள் விடுதலை வருடாந்திரக் கொண்டாட்டங்களைக் கொண்டாடின. அப்படிச்செய்வதன் மூலம் தாங்களும் அடிமைகள் விடுதலைக்காகப் போராடி அடிமைகளை மீட்டதாகத் தென் ஆப்பிரிக்கா பொது மக்கள் நம்பும்படி அபிநயத்துக்கொண்டது. இம்மாதிரிக் காரியங்களால் கிருஸ்தவக் கோயில்கள் பொது மக்கள் கண்களில் மண்ணைக் கொட்டி தங்களை உயர்ந்தவர்களாக மக்கள் நினைக்கும்படிச் செய்வது வேஷமல்லவா? கர்த்தர் கிருஸ்துவின் காலத்திலிருந்து அடிமை வியாபாரம் அளவிட முடியாத வகையில் பெருகியிருந்தது. 16 லட்சத்து 10 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட

ரோமாபுரியில் 9 லட்சம் அடிமைகள் இருந்தனர். கிருஸ்தவ சகாப்தமான 17-ம் நூற்றாண்டில் ரோமாபுரியிலும், மற்றும் எல்லா கிருஸ்தவ நாடுகளிலும், வன்னெஞ்சம் படைத்த அடிமை வியாபாரிகளும், தரகர்களும் மலிந்திருந்தனர். கிருஸ்துவாகட்டும், செயின்ட் பால் ஆகட்டும், மற்றும் எந்த தீர்க்கதரிசியாகட்டும் ஒருவராவது இந்த மனிதத்தன்மையற்ற செய்கையைத் தங்களின் வாழ்நாளில் கனவிலேனும் கண்டிக்கவேயில்லை. கோயில் பாதிரிகளும் இரக்கங்காட்டியறியோம்.

பிறகு ரோம் நகரில் ஸ்டோயிக்ஸ் என்ற தத்துவ ஞானிகளின் விடாமுயற்சியாலும், பிரயாசையாலும் அடிமை வியாபாரம் சற்றுத்தணிந்ததே யல்லாமல் கிருஸ்தவப்பாதிரிகளின் உபதேசத்தாலும், பிரசங்கத்தாலும் ஒருபோதும் தணியவில்லை அதோடு பாதிரிமார்கள் அடிமைகள் விடுதலையை மறதியாக வேனும் ஆமோதிக்க இசைந்தாரில்லை இது சரித்திரவாயிலாக நாம் காணும் உண்மையாகும். மேலும் ஞானிகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளுகிற கிருஸ்தவர்களின் கைகளுக்கு அதிகாரம் வந்து அரசாளும் காலத்தில் அதற்குமுன் அரசாண்ட அஞ்ஞானிகள் என்று சொல்லப்படுகிறவர்களின் காலத்தில் இருந்ததைவிட பல மடங்கு அடிமைகளும் அடிமை வியாபாரிகளும் இருந்தனர். 9-ம் நூற்றாண்டு வரையில் கிருஸ்துவக் கோயில்கள் அடிமைகள் "திருமணத்தை" ஆசீர்வதித்ததே இல்லை என மில்மான் என்பவரே ஒப்புக்கொள்ளுகிறார்

15-ம் நூற்றுண்டில் கிறிஸ்துவக் குடியேற்ற நாடுகளில் அடிமைகளும் அடிமை வியாபாரிகளும் பயங்கரமாக அதிகரிப்பதைப் பற்றி கிறிஸ்துவ சித்தாந்த நிருபகரான ப்ரூஸ் என்பவர் "ஆப்பிரிக்க அடிமைகள் வியாபாரம் மனித வர்க்கத்தின் சாபங்களிலெல்லாம் தலை சிறந்த பயங்கரமான சாபமாகும். இவ்வித சாபத்திற்கு அஸ்திவாரமாய் இருப்பது கிறிஸ்துவக் கோயில்களே" என்று சொல்லியிருக்கிறார்.

வில்லியம் வில்பர்போர்ஸ் என்னும் வீரர் அடிமை வியாபாரத்தை வெட்டிப்புதைத்து மனிதாபிமானத்தை நிலைநாட்டத் துணிந்துவேலை செய்ய முற்பட்டவுடனே கிறிஸ்தவ மதம் அவரைக்கண்டிக்கவும், அவருக்குச்செய்யக்கூடுமான உபத்திரவங்களையெல்லாம் செய்யத் துணிந்துவிட்டதுடன், கிறிஸ்தவர்களே அடிமைவியாபாரிகளாயிருந்து அதன்மூலம் பொருளீட்டி வந்ததனால் வீரர் வில்பர் போர்ஸ் எவ்வித இடஞ்

சல்களுக்கெல்லாம் ஆளாயிருப்பார் என்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம். எனினும் கடைசியில் அவரே வெற்றியடைந்தார்.

அமெரிக்காவில் இந்த அடிமை வியாபாரத்தை முதன் முதலில் கண்டிக்க முன் வந்தவர்கள் க்வாக்கர் என்ற சமூக சீர்திருத்தக்காரர்களாயிருந்தபோதிலும் முக்கியமாக ஜீவகாருண்ய சங்கத்தார்களே கண்டனத்தைத் தீவிரமாக்கி அடிமை வியாபாரம் மனிதத் தன்மைக்கொவ்வாத மானங்கெட்ட தொழில் என மக்கள் கருதும்படிச் செய்துவிட்டனர். அக்காலத்தில் வீரர் வில்பர் போர்ஸ் என்பவர் அமெரிக்கா கிறிஸ்துவக் கோயில்களைக் கண்டித்து "இந்தக் கோயில்களுக்கு இக் கொடிய செயலைக் கண்டிக்க வாயில்லையா? பசப்பு வார்த்தைகளால் பாசாங்கு காட்டி, உள்ளுக்குள் அக்கொடிய வேலையினால் வரும் இலாபத்தில் ஒரு பகுதியைப் பெற்றுக் களிப்பெய்துகிறதென்றால் இந்த அக்கிரமத்தை என்னென்பது" என்று புலம்பியுள்ளார்.

அமெரிக்கப் பாதிரிமார்கள் தங்கள் சொந்தத்திற்கு அடிமைகளை வைத்திருந்தார்கள். கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியாரான பாப்டிஸ்டுகள் தங்கள் சொந்தத்திற்கு 2,25,000 ($2\frac{1}{4}$ லக்ஷம்) அடிமைகளை வைத்திருந்தார். மற்றொரு பகுதியாரான மெதாடிஸ்ட் என்பவர்கள் 2,50,000 ($2\frac{1}{2}$ லக்ஷம்) அடிமைகளுக்கு எஜமானராக இருந்தார்கள். நிகழ்ச்சிகள் இவ்வாறிருக்க, கிறிஸ்தவ மதம் மனிதனுக்கு விடுதலையளிக்கவும், உத்தம மார்க்கத்தைக் காட்டவும் வந்தது என எவ்வாறு ஒப்புக்கொள்ளமுடியும்? கிருஸ்து உலகம் யாங்கணும் இவ்விதமான இரக்கமற்ற காரியத்தைச் செய்து வருகையில் கிருஸ்து மதத்தைப் புறக்கணித்த (மதமற்ற) பிரான்ஸ் தேசம் முதன் முதலில் அடிமை வியாபாரத்தைத் தொலைத்து அடிமைகள் விடுதலைக்கான ஓர் ஒப்பற்ற சட்டத்தைச் செய்து ஐரோப்பா கண்டத்திற்கு இடித்துக்காட்டிற்று.

வால்டையர் தன்னுடைய காலத்தில் கிறிஸ்துவாலயங்கள் சுமார் 60,000 அடிமைகளை சுவாதீனப்படுத்தியிருந்ததாகக் கூறுகிறார்.

1676-க்கும் 1776-க்கும் இடையேயுள்ள அந்த நூறு ஆண்டுகளில் மாத்திரம் கணக்குப் போட்டுப்பார்த்தால் ஆங்கி

லேயர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கும், பிரான்ஸ், ஸ்பெயின் தேசங்களுக்கும் கொண்டுபோய் விற்ற அடிமைகளின் தொகை 30-லக்ஷமாகிறது. சந்தைகளுக்கு வந்து சேருவதற்குள் பெரும்பாலான அடிமைகள் மாய்ந்துவிடுவதால் அடிமை வியாபாரிகள் தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அடிமைகள் தேவையாயிருப்பின் அந்த அளவிற்கு ஒரு பகுதி அதிகமாக வே அடிமைகளை ஏற்றி வருவதுண்டு. அப்படி அவர்களை ஏற்றியனுப்பப்படும் விதத்தைச்சற்று கேட்டால் இருதயமுள்ள எந்த மனிதனுக்கும் இரத்தம் கொதிக்காதிருக்க முடியாது. அந்தோ! என்னென்றுரைப்பது! மீன்களைப் பெட்டிகளில் போட்டு பார்சல் செய்து அனுப்புவதுபோல இந்த மானிட வுருவம் பெற்ற மீன்களை (பீப்பாய்) பேரல்களில் போட்டு அடைத்துக்கொண்டு போவது வழக்கம். ஆப்பிரிக்காவி லிருந்து வெளி மார்க்கட்டுகளுக்குப் போய்ச் சேருவதற்குள் 100-க்கு 50-பேர்கள் தான் உயிருடனிருப்பார்களாம். மற்ற வர்கள் பசியினாலும், வியாபாரியின் இம்சையாலும், பிர யாண அலுப்பினாலும் மாண்டுபோகாமல் எப்படியிருக்கமுடி யும்?

இவ்விதம் குற்றுயிரோடு கொண்டுவரப்பட்டு விற்கப் பட்ட அடிமைகள்தான் விவசாயப் பண்ணைகளிலும் காடுகளி லும் மாடுகள் போல், ஏன் அதற்கும் கேவலமாக நடத்தப் பட்டு வேலை வாங்கப்பட்டனர்.

1690-முதல் 1820-வரையில் சுமார் 8,00,000 (8-லக்ஷம்) அடிமைகளை ஜெமகா தீவிற்குக் கொண்டுபோனதில் சிறிது காலத்திற்குப் பிறகு கணித்துப்பார்த்ததில் 3-லட்சத்து 40-ஆயிரம் அடிமைகளே உயிருடனிருந்தனர். மற்ற $4\frac{1}{2}$ லக்ஷம் பேர் மடிந்துவிட்டனர் என்றால் அந்த அடிமைகள் என்ன பாடு படுத்தப்பட்டிருப்பார்கள் என்பதை விவரிப்பதை விட நினைத்துப்பார்த்தால்தான் நன்கு விளங்கும். அடிமைகளைத் தங்கள் சொந்த நாட்டிலிருந்து கொண்டுவரும்போது அவர்கள் கைகளுக்கு இரும்பு விலங்குகளிட்டுக் கொண்டு வந்தார்கள். அந்தவிலங்குகள் எங்கே தயாரித்து அனுப்பப்பட்டன என்ப தை கவனித்தால் விஷயம் வெட்ட வெளிச்சமாகும்.

கிறிஸ்துவ நாடான இங்கிலாந்திலே கிறிஸ்துவ பட்டண மான பர்மிங்ஹாம் நகரத்திலே ஞானவான்களான கிறிஸ்துவ வியாபாரிகளால் அந்த அடிமை விலங்குகள் தயாரித்து அனுப்

பப்பட்டனவென்றால் கிறிஸ்துவ மதம் இருந்தமாதிரியை நீங்களே அறிந்துகொள்ளுங்கள். ஏற்கனவே காட்டுத்தீப்போல் படர்ந்து வரும் மனிதாபிமான வெள்ளமும், ஜீவகாருண்யச் சிந்தமும் இத்தரணியில் செல்வாக்குப்பெற்று, இங்கு மலிந்து கிடக்கும் அக்கிரமங்களை அடிமாளவைப்பதோடு கிறிஸ்தவக் கோயில்களுக்கும் உண்மைத் தொண்டின் லக்ஷணங்களை புட்டுக் காட்டும் என்பதில் எனக்குச் சற்றேனும் ஐயமில்லை. இந்த மனிதாபிமான இயக்கம் சீக்கிரத்தில் உலகில் பரவமுடியாத நிலைமையில் இன்று இருந்தாலும் உலக சுகத்தின் — சாந்தியின் ''தலையெழுத்து'' மனிதாபிமான இயக்கத்தினின் கைகளில் தானிருக்கிறதென்று உறுதியாகச் சொல்லலாம். சென்ற மஹா யுத்தம், எவ்வளவோ முயற்சியாலும், உழைப்பாலும், மனிதாபிமானமுடைய சீரியரால் செய்து முடித்த மனித முற்போக்கான காரியங்களைப் பாழ்படுத்திவிட்டது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். போதாக்குறைக்கு மற்றொரு யுத்தம் கிளம்புமானால் மனிதாபிமானம் என்பது உயிருடனிருக்குமா என்பதே சந்தேகம்.

தேசங்களுக்குள்ளே இருக்கும் தகராறுகளையும் சிக்கல்களையும், எல்லோரும் கலந்தாலோசிப்பதின்மூலமும் அதன் பலனாகச்செய்துகொள்ளும் உடன்படிக்கைகளின் மூலமும் வெற்றிகரமாக வீண் சண்டையில்லாமல் தீர்த்துக்கொள்ளலாமென்று நாமும் மற்றும் பிறரும் கத்திக்கொண்டுதானிருக்கின்றோம். இந்தக் கூக்குரலை யார் கேட்கின்றார்கள்?

மோட்ச நரகம்.

மோட்சம் என்பது ஒன்றும் கிடையாது; மறுபிறப்பு என்பதும் இல்லை; அழியாத ஆத்மா என்பதுமில்லை; மனிதன் பிறக்கிறான்; உயிரோடு வாழ்கிறான்; பின்னர் இயற்கை நிலையை (மரணத்தை) அடைகிறான்; இது தான் உண்மையேயன்றி வேறில்லை. ஆகையால் மனிதர்கள் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும்; மறுபிறப்பு உண்டு என்கிற கொள்கையே சன்மார்க்க வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கிறது; இந்தப் பிறப்புத்தானிப்போது வாழ்கிற வாழ்விற்கு முக்கியமானது என்று மக்கள் நம்புவார்களானால் அவர்கள் பகுத்தறிவுடன் நடந்துகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

சர். சி. வி. இராமன்.

மதத்திற்குப் பதிலாக?

(பிரீமேன் ஹோம் உட்.)

மதங்களை ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகின்றவர்களான நாஸ்திகர்களை மதப்பற்றுடையவர்கள் அடிக்கடி இரண்டு கேள்விகள் கேட்கின்றார்கள்.

அவை முதலாவது:- "மதங்கள் ஒழிக்கப்பட்டுவிட்டால் அதற்கு பதிலாக வேறு எதை ஏற்படுத்தப் போகிறீர்கள்" என்பது.

இரண்டாவது:— "நீங்கள் ஏன் அழிவு வேலைக்காரர்களாய் இருக்கிறீர்கள்"? என்பதுமாகும்.

மதங்களே கூடாது என்றும், அவை மனித சமூகத்தின் மனிதத் தன்மைக்கும், பகுத்தறிவுக்கும் முன்னேற்றத்திற்கும் நாசகாரியாய் இருக்கின்றனவென்றும் சொல்லுகின்ற நாம், மதங்கள் இருந்த இடத்தில் வேறு எதை வைக்கமுடியும்? ஏன் வேறொன்று வேண்டும்? மதங்கட்கு பதிலாக எதையும் வைக்கப்போவதில்லை, வைக்கவேண்டிய அவசியமும் இல்லை. ஒரு வைத்திய நிபுணன் ஒரு வியாதியைப்போக்க வைத்தியம் செய்யும் பொழுதும் ஒரு தோட்ட வேலைக்காரன் தோட்டத்திலுள்ள களைகளைப் பிடுங்கி எறியும்போதும் வியாதிக்கு பதிலாகவும் களைகளுக்கு பதிலாகவும் நீங்கள் எதை வைக்கப் போகிறீர்கள்? என்று அவர்களை யாராவது கேட்கிறார்களா? ஆகவே மதம் ஒழிக்கப்படவேண்டும் என்று பாடுபடுகின்ற மத ஒழிப்புக்காரர்களுடைய வேலை அப்படிப்பட்டதேயாகும்.

அப்படிப்பட்டவர்களை அதற்குப் பதில் வேறு என்ன வைக்கப்போகிறீர்கள்? என்று கேட்கும் கேள்வியானது ஒரு முட்டாள்தனமான கேள்வி என்றுதான் சொல்லவேண்டும். மதக்காப்பாளர்களான குருக்கள், பாதிரிமார்கள் முதலியவர்கள் மக்களின் அடிமைத்தனத்தை ஆதரித்தும் அதை ஒரு தெய்வீகப் பிரசாதம் என்றும் அது அவசியமானது என்றும் சொல்லி மதத்தைக் காப்பாற்றி வந்தார்கள்; ஆனால் இப்பொழுது மதம் என்பது மனித சமூகத்துக்குக் கேடானது என்று கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கவேண்டியதாய் விட்டது.

மதம் மாத்திரமே அல்லாமல் கடவுள் நம்பிக்கையும், அதன் வியாக்கியானங்களும், கோவில்களும், மதக்காப்

புத் தொழில்களும் அடிமைத்தனம் கொண்ட மூளையின் கோளாறுகளே தவிர மற்றப்படி அவற்றில் எவ்வித உண்மையோ காரணமோ இல்லை. ஆதலால் அவை அழிக்கப்படவேண்டியது நியாயமும் அவசியமும் ஆகிவிட்டது.

மனித சமூகம் அறிவு விளக்கம் பெறுவதற்கும் முற்போக்கடைவதற்கும் வழிதிறக்கப்பட்டாகவேண்டும். அதில் உள்ள தடைகள் எல்லாம் தகர்த்தெரியப்படவேண்டும்.

ஒரு மனிதனுடைய வியாதியை நாம் சொஸ்தப்படுத்தும்போது அவன் சுக தேகியாகவும் பலாட்டியனாகவும் வேண்டும் என்கிற ஆசையால பாடுபடுகின்றோமே ஒழிய அவனுடைய வியாதிக்காக வேறு வியாதியை உண்டாக்கவேண்டியதில்லை. அதுபோல நாம் மதங்களை ஒழிக்கும்போது மக்களை அறிவு விளக்கத்திற்கான வழியில் கொண்டு வந்து விட்டவர்களாவோம். அதாவது அவர்களைப் பகுத்தறிவாளிகளாக ஆக்குகிறோம்.

இந்தக் காலமானது மக்கள் தனித்தனியே சுதந்திரத்தோடு ஆராய்ச்சி செய்யும் காலமாகும்.

''டெலிபோன் டைரக்டரி'' என்னும் புஸ்தகத்தில் வீழ்ந்து போன கம்பெனிகளின் பெயர்களடங்கிய பக்கங்களைக் கிழித்து எறிவது அழிவு வேலை என்று சொல்லப்பட்டாலும் புஸ்தகம் தெளிவும பரிசுத்தமுமாவதற்கு அந்த அழிவு வேலை எவ்வளவு அவசியமோ அதுபோல் மதம் ஒழிக்கப்படும் அழிவுவேலையும் அவசியமானதாகும்.

மதத்தை அழிக்கின்றவன்-நாஸ்திகனானவன் மனித சமூகத்துப் பொருளாதாரத் துறை, அரசியல் துறை, சமுதாயத் துறை, கல்வி அறிவு ஆகியவைகளின் முற்போக்கையும் மேன்மையையும் குறிப்பாய் வைத்தே அந்தக் காரியத்தைச் செய்யத் துணிகிறானே ஒழிய, வேறு அறியாமையாலோ பொறுப்பற்ற தன்மையாலோ அல்ல. மனித சமூக முற்போக்குக்காரன் மத விஷயத்தில் அதை ஒழிப்பதைத் தவிர அவனுக்கு வேறு ஒரு மார்க்கமும் கிடையாது.

மதமும் மதத் தத்துவங்கள் என்பவைகளும் உண்மை உணர்ச்சிக்குப் பெரிய களைகளாய் இருக்கின்றன. ஆதலால் நாஸ்திகர்கள் அக்களைகளை அப்புறப்படுத்தி நிலத்தைப் பண்படுத்தட்டும்.

"ட்டாக்கி"யின் துரோகம்.

[மிஸ்டர். திங்கர்.]

எனது ஆப்த நண்பர் ஒருவர்; அவர் எப்பொழுதும் "குஷால்" ஆகவே இருப்பார். அவர் கவலைப்படுவதை நான் பார்த்ததே இல்லை. சில சமயங்களில் இவர் "சதா போதைப் பேர்வழியோ" என்ற சந்தேகங்கூட என் மனதில் ஜெனிப்ப துண்டு. சே! அப்படி அல்ல; நாம் நினைப்பது சுத்தப் பிசகு "இது ஒரு குஷிப்பிரகிருதி என்று சமாதானம் செய்து கொள்ளுவேன்.

அவரும் நானும், இடையில் இரண்டு மூன்று வருஷங்கள் சந்திக்கவில்லை. அவர் உத்தியோக தோரணையில் சென்னைக்குப் போய்விட்டார். கடைசியாக நேற்றுச் சந்தித்தோம் இருவரும் நெடுநேரம் வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் பேச்சில் பொதுச் சங்கதிகள் கிடையாது. மூன்று வருஷத்து விஷயங்களை முக்கால் மணியில் முடித்து விட்டோம்.

அன்று நல்ல விருந்து. என் மனைவிக்கு விருந்துச் சாப்பாடு செய்வது என்றால் வெகுபிரியம். ஏனென்றால், நான் ஒரு பகுத்தறிவுக்காரன் என்ற முறையில் எந்தப்பண்டிகைகளையும் கொண்டாடுவது கிடையாதல்லவா? ஆதலால் விருந்தினரைச் சாக்கிட்டாவது கொஞ்சம் தடபுடலாகச் சமையல் பண்ணிச்சாப்பிடலாமே என்கிற ஆசைதான் அவளுக்கு.

மாலையில் நானும் நண்பரும், "டிபன்" சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் வெளியில் உலவச்சென்றோம.

எனக்குச்சங்கீதத்தில் கொஞ்சம் கிறுக்கு. எங்கேயாவது ஒப்பாரிச் சத்தம் கேட்டாலும் சங்கீதமே என்று சற்று நின்று கவனிப்பேன். ராகம் புரியாவிட்டால் முகாரி ராகத்தில் இது ஒரு "ராகம்" போலும் என்று சமாதானம் பண்ணிக்கொள்வேன்.

"ட்டாக்கி" என்றால் ரொம்பப் பைத்தியம். திருவாரூரில் "பர்மனென்ட் சினிமா தியேட்டர்" கிடையாது. எப்பொ

மூதாவது "டூரிங்" பேசும்படங்களும், பேசாப் படங்களும், வருவதுண்டு. நானும் தவறாமல் போவதுண்டு.

அன்று "கருணாநிதி தியேட்டரில்" நல்லதங்காள் பேசும் படக்காட்சி நடைபெறும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதைப்பார்த்தேன். போகலாம் என்று பிரியப்பட்டேன். நண்பரை "நாம் இன்று ட்டாக்கிக்குப் போகலாமா? முதல்" "ப்ளே" 8½-மணிக்கெல்லாம் முடிந்து விடும்" என்றேன்,

"அடசனியனே? போயும் போயும் டாக்கி சினிமாவையா பார்க்க வேண்டும்? அதிலும் தமிழ்ப் படத்தைப்பார்ப்பது யார்? தமிழ்ப் படத்திலும பொழுதெல்லாம் அழுது வடியும் நல்லதங்காளுக்கா போவது? இதைவிட எங்கேயாவது எழவு வீட்டுக்குப்போய் ஒப்பாரி கேட்கலாமே" என்றார்.

"உங்களுக்கு ஏன் சினிமாவில் இவ்வளவு சலிப்பு ஏற்பட்டுவிட்டது? முன்பெல்லாம் அடிக்கடிபோவீர்களே? சென்னைக்குப் போனபின் அதிகமாகப் பார்த்து அலுத்துப்போய் விட்டீர்களே"

"ஆம் எனக்கு இப்பொழுது ட்டாக்கி என்றால் வெகு சலிப்புதான் "ட்ராமா"வே எனக்குப் பிடிக்கிறதில்லை என்ற சங்கதிதான் தெரியுமே! ஏதாவது 'சயிலன்ட் பிக்சர்' என்றால் போய்ப்பார்ப்பேன். இந்த எழவெடுத்த ட்டாக்கி வந்த பிறகு நல்ல சினிமாவே பார்க்க முடிகிறதில்லை" என்றார்.

"என்ன "சார்" நீங்கள் சொல்லுவது ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது? ட்டாக்கியானது சயின்சின் வளர்ச்சிக்கு அடையாளமல்லவா? மிகவும் ஆச்சரியமான சம்பவமல்லவா? அதை வெறுப்பது ஏன் என்று எனக்கு விளங்கவில்லையே" என்றேன்.

"நான் சயின்சியின் அபிவிர்த்தியையோ அல்லது அதிசயத்தையோ வெறுக்கவில்லை. "ஆர்ட்" என்பது ஒரு தனிக் கலை. அதில் காடகமும் ஒன்று, நாடகம் என்கிற ஆர்ட்டை ஏற்கனவே தமிழர்கள் குட்டிச்சுவராக்கிவிட்டார்கள். போதும் போதாதற்குப் பேசும் சினிமா வந்தது. அதிலும் தமிழர் புகுந்து "ஆர்ட்டை"க் கொலை செய்கிறார்கள். இந்தக் கண்ட்ராவியை என்னால் பார்க்கச் சகிக்கமுடியவில்லை.

இந்த அசட்டுத் தமிழர்கள் கையில் எது அகப்பட்டு உருப் பட்டது? எதையும் குட்டிச்சுவராக்குவதுதான் இவர்கள் வழக்கம்.

சினிமா உலகத்தில் ட்டாக்கி எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்று எதிர்பார்த்தார்களோ அவ்வளவு தூரம் வெற்றி பெற முடியவில்லை என்பதே இப்பொழுது உலவும் அபிப்பிராயம். இதை நன்றாக நிரூபிப்பவர்கள் தமிழர்கள்.

“மேல்நாட்டினரும், வட இந்தியருமாவது ஓரளவு ட்டாக்கியில் முன்னேறி வருகிறார்கள். தமிழர்கள் சுத்த அசடுகள்” என்றார்.

“ஆமாம்! நீங்கள் சொல்லுவது சரியாகத்தான் தோன்றுகிறது! தமிழ் டாக்கிகளில் சங்கீதம் ஒன்றைத்தவிர மற்றவைகளெல்லாம் குறைவாகத்தான் இருக்கிறது” என்றேன்

சங்கீதம்! என்ன சங்கீதம் வேண்டியிருக்கு! சனியன் பிடித்த சங்கீதம்தான் டிராமாக்களையும், சினிமாக்களையும் குட்டிச்சுவராக்கிக் குப்பைமேடாக்கினது. ஒரு விஷயம் உண்மையாக--இயற்கையாக நடப்பது போலத் தெரிவிப்பதற்கே நாடகம் ஏற்பட்டது. பல நல்ல விஷயங்களை—ஜன சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கும், நாகரீக அபிவிருத்திக்கும், வேண்டிய விஷயங்களை நடந்தது போல நடத்திக் காட்டி ஜன சமூகத்தை அபிவிர்த்தி வழியில் செல்ல உற்சாகப்படுத்துவதே நாடகத்தின் முக்கிய நோக்கம். இந்த நோக்கம் சித்தியாகவேண்டுமானால, நடிப்பு, நடிப்புக்குத் தக்க பாவனை, பாவனைக்குத்தக்க பேச்சு இவைகள்தான் வேண்டும். இவைகளை நாடகக்காரர்கள் கைவிட்டு, நாடகத்தை வெறுஞ் சங்கீதக் கச்சேரியாகச் செய்தார்கள். இந்த நாடகக்காரர்களிலும் சில உதவாக்கரைப் பேர்வழிகள் பேசும் சினிமாவில் சேர்ந்து அதைக் கரையேற்றுகிறார்கள். இப்படியானால் தமிழ் ட்டாக்கிகள் எப்படி உருப்படும் என்றார்.

சரி இது கிடக்கட்டும் ட்டாக்கியில் வந்துள்ள கதைகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

“அந்த விஷயத்தை நினைக்கும்போது சினிமாக்களையே அடியோடு தொலைத்துவிட்டால் தேவலாம் என்று நினைக்கிறேன். அதிலும் இந்தப் பாழும் ட்டாக்கிகள் நாச

மாகவேண்டும். மனித சமூகத்தை மேலும் முட்டாள் தனத்திலும், மூட நம்பிக்கைகளிலும் அழுத்தி அநாகரீகர்களாக வைப்பதற்கே இந்த ட்டாக்கிகள், தமிழ் ட்டாக்கிகள் உண்டாயிருக்கின்றன. ஜனங்களின் புத்தியை விருத்தி பண்ணுவதற்கு ஏற்ற அமைப்புள்ள கதைகளை நடிப்பதே கிடையாது. எல்லாம் புராணங்கள்தான். ஜன சமூக முன்னேற்றத்திற்கு உழைக்கும் சீர்திருத்தக் காரர்களுக்கு இந்த ட்டாக்கிகளைப் போன்ற "எமன் வேறில்லை" என்றார். உடனே எனக்கு நல்லதங்காள் மேல் உண்டான ஆசை ஓடிப்போயிற்று. இருவரும் திரும்பி வீடு வந்து சேர்ந்தோம்.

இரவில் எனக்குத்தூக்கம் பிடிக்கவில்லை. நண்பரும் நானும் மாலையில் பேசிக்கொண்டவைகளை நினைத்துக்கொண்டே இருந்தேன். நினைக்க நினைக்க எனக்குக்கோபமும் ஆத்திரமும் பொங்கியெழுந்தன.

இந்த விஷமப்பிரச்சார ட்டாக்கிகளையெல்லாம் என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. அந்தப்பெரியவர் இருந்தாரே—டாக்கிகளின் தந்தை—அவர்தான் தாமஸ் ஆல்வா எடிசன், அவர்மீது கூட எனக்கு ஆத்திரம் வருகிறது. அவர் ஏன் வருந்தி வருந்தி உழைத்து பேசும் சினிமா உண்டாகும்படி செய்தார்? ஜனசமூகத்தை மூடச்சமுத்திரத்தில் தள்ளுவதற்கு காசாசைப் பிடித்தவர்கள் உபயோகப் படுத்திக்கொள்ளுவார்கள் என்று தெரிந்தால் இதைக்கண்டு பிடித்திருப்பரா?

என்னே பைத்தியக்கார உலகம்! ட்டாக்கி என்றால், அதிலும், ராமாயணம், பாரதம், கிருஷ்ணலீலா, சீதாகல்யாணம், என்றால், ஆட்டு மந்தைகள்போல் கூட்டங்கள் சேர்ந்து விடுகின்றன. பட்டிக்காட்டுப் பாமர மக்கள் 3-அல்லது 4-அணா காசை முந்தாணியில் முடிந்துகொண்டு "பியாஸ்கோப்" பார்க்கப் புறப்பட்டு விடுகிறார்கள். ஏற்கனவே மண்டையில் நிறைந்திருக்கும் மூடநம்பிக்கைக்கு நன்றாக ஆணியடித்துக்கொண்டு போய்ச் சேருகிறார்கள்.

இந்த நிலையில் பகுத்தறிவு வளர்வது எப்படி? பாமர ஜனங்களின் மூளையில் நுழைவது எப்படி? எனக்கு ஒன்றும் புரியவில்லை. உங்களுக்கு ஏதாவது புரிந்தால் அந்தப்படி செய்யுங்கள்!

விஞ்ஞானம்.

[பி. லட்சுமி நரசு, பி. ஏ., பி. எல்.,]

விஞ்ஞான (சயின்ஸ்) முறையானது பகுத்தறிவையும், பிரத்தியட்ச அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டது. அந்த முறையில் சந்தேகத்திற்கு இடமில்லை. சரியான சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டேதான் விஞ்ஞான தத்துவங்கள் முடிவு கட்டப்படுகின்றன அந்த முறை விருப்பு வெறுப்பற்றது.

நமது மூதாதைகள் அறியாத அநேக உண்மைகளை நவீன விஞ்ஞான சாஸ்திரம் வெளிப்படுத்தியதன் மூலமாக நமக்கிடையே மலிந்து கிடந்த பொய்த் தோற்றங்கள் பல மறைந்து விட்டன. சிலைப் பகட்டுகள் தேய்ந்துவிட்டன. தப்பான ஐதிகங்கள் தவிடு பொடியாகிவிட்டன.

நீராவியினாலும், மின்சார சக்தியினாலும், பெட்ரோலினாலும், கம்பியில்லாத்தந்தி மூலமாகவும், தற்கால விஞ்ஞான சாஸ்திரம் மனிதனுக்கு எத்தனையோ போக போக்கியங்களை அளித்திருக்கிறது. இந்த ஆச்சரியங்களால் நாம் வசிக்கும் உலகம் அழகு பெற்று வசீகரமாகிவிட்டது. பரலோகம் மனிதர்களின் எண்ணத்திலிருந்து வெகுவாக மறைந்துகொண்டிருக்கிறது.

போதுமான ஆதாரம் இல்லாமல் ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிப்பானானால் அதனால் ஏற்படும் தீமை அவனுக்கு மட்டும் அல்ல; அவனுடைய அறியாமைநாளடைவில் சமூகத்தைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

ஒரே அறிவுதான் உண்டு. அந்த அறிவு விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. கண்ணால் பார்ப்பவைகளும், அவைகளின் மூலம் உண்டாகும் முடிவுகளுமே விஞ்ஞான சாஸ்திரத்திற்கு அடிப்படையாகவும் மேற்காப்பாகவும் இருக்கின்றன. ஆதலால் விஞ்ஞான சாஸ்திரமே மனிதனுடைய அறிவுக்கு மாட்சியை அளித்திருக்கிறது.

பெண் விஞ்ஞானிகள்.

"பெண்கள் பேதைகளென்ற பேய் மாற்றம் தொலைந்து அறிவூற்றுகள் என்ற ஆழ்ந்த கருத்து உலகம் முழுதும் ஓங்கி வருகிறது. அதற்கேற்ப பெண்களும் பல துறையிலுமுள்ள தம் ஆற்றலை விளக்கிவருகிறார்கள், அமெரிக்காவில் ஒருவர், "இந்த நாட்டிலுள்ள 247-விஞ்ஞானிகளின் பெயரை எழுதினால் அதில் மூன்று விஞ்ஞானிகள் பெண்களாயிருக்கக் காணலாம்" என்று சொன்னார். ஆனால் இங்கிலாந்துப் பெண்கள் நிலைமை தெரிந்த இன்னொருவர் இலங்கை டெய்லி ந்யூசில் "100-ஆங்கில விஞ்ஞானிகளின் பெயரை எழுதினால் எட்டுப்பேர் பெண்களாயிருக்கக் காணலாம்" என்று எழுதுகிறார்.

ஸ்ரீமதி டோரிஸ் மாக்னான்.

இங்கிலாந்துப் பெண் விஞ்ஞானிகளில் முதன்மையானவர் டோரிஸ் "மாக்னன் ஆம்." இவரை சர்வ தேசங்களும் ஓர் மிகத் தேர்ந்த பிராணிசாஸ்திர நிபுணரென்று ஒப்புக்கொள்ளுகின்றன. இளமையும் நல்ல உடற் கட்டும் சௌந்தரியமுமுடைய இவரை கடந்த மகா யுத்தத்தின்போது பிரிட்டிஷ் ஆஸ்பத்திரிகளில் புரேட்டோ ஜூவோலஜிஸ்டாக நியமித்தார்கள். ஆபர்டீனில் பிறந்து தேர்ச்சிபெற்று எண்ணிறந்த விஞ்ஞானிகளைப் பயிற்றுவித்த இவர் தற்போது செல்சியில் வசிக்கிறார்.

ஸ்ரீமதி ஹெலன்.

அடுத்தபடியாக தாவர சாஸ்திர நிபுணராய் ஸ்ரீமதி "ஹெலன் கெய்ன் வாகன்" என்பவர் விளங்குகிறார். இவர் தற்போது லண்டன் அரசர் கல்லூரியில் தாவர சாஸ்திரியாயிருக்கிறார், ஸ்ரீமதி ஹெலன் சற்று உயரமாகவும், ஆடம்பரமாக

வும் கம்பீரமாகவும் தோன்றுகிறார். அவருடைய கணவரும் ஓர் தாவர சாஸ்திரியாம். இருவரும் இரு தனித்தனிக் கல்லூரிகளில் வேலை பார்த்து வருகிறார்கள். விடுமுறைக்காலங்களில்தான் இருவரும் சந்திப்பார்கள். அக்காலங்களில் அவர்கள் விசேஷமான ஆராய்ச்சிகளில் இறங்குவதியல்பு. ஸ்ரீமதி ஹெலன் சமீபத்தில் பார்லிமெண்ட் ஸ்தானத்திற்கு அபேக்ஷகராக இருந்தார். அவர் குழந்தைகட்கு முத்தம் கொடுப்பது தீமையான செயலென்று வழியுறுத்த உபதேசம் செய்து வருகிறார்.

ஸ்ரீமதி ஹெரியட்.

ஸ்ரீமதி ஹெலன், மாக்னன் இவர்கள் தத்தம் துறைகளில் எவ்வளவு கைதேர்ந்திருக்கின்றார்களோ அதே போல நோய் நுட்பங்களுங் கலையில் ஸ்ரீமதி ஹெரியட் சிக்சிறந்து விளங்குகிறார், தற்போது இவர் லிஸ்டர் கலாசாலையில் வேலை பார்த்து வருவதோடு வைட்டமின் (சத்துப் பொருள்) சம்பந்தமான கலையில் உலகப் பண்டிதராய் மிளிர்கின்றார். அவர் பெண்ணுலகில் எவ்வாறு அறிவில் சிறந்து விளங்குகின்றாரோ அதேபோல அழகிலும் வசீகரத்திலும் சிறந்துவிளங்குகிறார்.

டாக்டர் டோராத்தி.

மற்றொரு விஞ்ஞானியைச் சொல்வதானால் டாக்டர் டோராத்தி ஜோர்டனைத்தான் குறிப்பிடவேண்டும். இவர் இளமையும் அழகும் மிகுந்தவர். இவருடைய நிபுணத்துவம் புரோட்டின் சம்பந்தமான அறிவிலிருக்கிறது. அஃதின்றி நர்த்தனத்திலும் நல்ல தேர்ச்சியுண்டு. இவற்றையெல்லாம் விட மலையேறுவதில் காண்பிக்கும் விருப்பமே அபாரம், ஆல்பஸ் மலையின் பல பகுதிகளைப் பலதடவை ஏறிப் பார்த்திருக்கிறார்.

ஸ்ரீமதி மெல்லன்பி.

இவரைப்போன்றே உலகம் ஸ்ரீமதி மெல்லன்பி என்பவரையும் மெச்சுகின்றது, ஸ்ரீமதி மெல்லன்பி ஜீரணத்தால் பற்கள்

எவ்வாறு பாதிக்கப்படுகின்றன வென்பதை அதிசயமான முறையில் கண்டு பிடித்துக் கொண்டார். இன்று உலகம் அவருக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கின்ற தென்பதைக்கூற முடியாது.

இன்னும் பலர்.

இவ்வண்ணம் இங்கிலாந்தில் பாக்டீரியா நிபுணராகிய டாக்டர் ஹானர் பெல்லும், உடற்கூற்று நிபுணரான வினிபிரட்கல்லிஸும், தாவர சாஸ்திர வல்லுநர் டாக்டர் எதல் நான் ஸிமைல்ஸ் தாமஸும் இதுபோன்ற பலருமிருப்பது நம்மிந்தியர்க்கு வியப்பும் படிப்பும் ஓர் இடிப்புமாகும். ஓர் ஆங்கிலப் பத்திரிகை இம்மங்கையரைப்பற்றிக் கூறிவிட்டு "இவர்கள் புருஷர்கட்கோர் பாடம் கற்பிக்கமுடியும்" என்றார், ஆங்கில ஆண்களுக்குப்பாடம் கற்பிக்கமுடியுமென்றால்இந்தியப்புருஷர்கட்கு எத்தகைய பெரும் பாடத்தைக் கற்பிக்கமாட்டார்கள். அதுவும் ஒரு தமிழ் நாட்டுப் பழங் கிழங்கட்குப் போதிக்கக் கூடிய பாடத்திற்கு அளவுண்டா?

தமிழ் நாடே! விழித்துப்பார். இன்னும் கண்ணை மூடிக்கொண்டிருந்துகொண்டு பாடின பாட்டையே பாடி தலையை அசைத்துத் தாளம் போட்டுக்கொண்டிருப்பதால்—இப்பொழுதே உன் நாடகத்தைப் பார்ப்போர்கள் "உள்ளே போ, உள்ளேபோ" வென்று கத்துகின்றார்கள். அதற்கும் சும்மாயிருந்தாயென்றால்—உன்படுதாவிற்கு நெருப்பு வைக்கப் பட்டு கொட்டகைக்கு எரி மூட்டப்பட்டு, நீயும் கையைப் பிடித்து இழுத்தெறியப்படுவாய். எனவே விரைவில் ஆண்மையுடன் கண்ணைத்திறந்து பாட்டை மாற்றிக்கொள்.

"மதத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு கொடிய பழக்கத்தை அனுசரிப்பதற்கு யாருக்கும் சுதந்தரம் இல்லை."

சர். ஆர். கே. சண்முகம்.

பிரபஞ்சம் கடவுள் சிருஷ்டியா?

ம. சிங்காரவேலு, பி. ஏ., பி. எல்.,

மதம் அல்லது ரிலிஜன் என்பது புராதன கற்பனை. விஞ்ஞானம் அல்லது சயன்ஸ், என்பது நவீன அநுபவம். இவ்விரண்டும் முரண்பட்டே நிற்கும். எனெனில் மதம் புலன்களுக்கு அதீதப்பட்டது. மெஞ்ஞானம் புலன்கள் மூலமாக எழும் அநுபவம். இவ்விரண்டின் கோட்பாடுகளையும், அவை முரண்பட்டு நிற்கும் விஷயங்களையும் அறியவேண்டியவர்கள். ஓர் பிரபல நூலாகிய (Conflict between Religion and Science) ''மதத்திற்கும் மெஞ்ஞானத்திற்குமுள்ள போராட்டம்'' என்ற நூலை வாசித்தறியலாம். இந்தப்போராட்டம்மதத்தைக் கொண்டு உலகத்தை ஏமாற்ற முயற்சிக்கும் வரை இருந்தே தீரும். மதங்களின் செல்வாக்கு, மூட நம்பிக்கையால் நிலைத்திருக்கிறது. மூட நம்பிக்கை போகுமளவும், மதங்கள் இளைத்துக் கொண்டே வரும். உலகில், பாரம்பரியமாய், அநேக ஆயிரம் வருஷங்களாக இருந்து வரும் மூட நம்பிக்கைகளை, ஒழிக்கவே மெஞ்ஞானம் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால் மதப்பற்றுள்ளோருடைய ஆதிக்கமும், பழக்கமும் மத நிகழ்ச்சிகளில் கட்டுண்டிருக்கிறபடியால், சிலகாலம் மெஞ்ஞானத்தை இகழ்ந்தும், துன்புறுத்தியும் அழிக்க முயன்று வரப்பட்டது. இந்த இம்சைகளுக்கெல்லாம் தப்பித்துக் கொண்டு, மெஞ்ஞானம் தலை நிமிர்ந்து உலகம் ஆதரித்து வருங் காலை, விருந்துக்கு வேண்டாமென்ற பங்காளி ''இலை பொத்தல், பொத்தல்'' என்று சொல்லிக்கொண்டு வருவதைப் போல் மதவாதிகளும், ''மெஞ்ஞானத்திற்கும், மதத்திற்கும் வித்தியாசமில்லை; மெஞ்ஞானமும், மதங்கள் கூறும் நோக்கையே காட்டுகின்றது'' என்று கூப்பாடு போடுகின்றனர்.

இவ்விதமாக மதத்திற்கு ஆதாரவைத்தேட முயற்சித்தவர் பலர். அவர்கள் அபிப்பிராயம் என்னவெனில்,மெஞ்ஞான விசாரணையில் அறியமுடியாத விஷயங்கள் பலவுள. ஆதலால், அவைகள் மதங்கள் மூலமாகவே தெரிந்துகொள்ள வேண்டுமென்பார். ஆனால் எந்த விஷயங்களில் மெஞ்ஞான முடிவு ஏற்படவில்லையோ, அந்தந்த விஷயங்களுக்கு மதமே அதிகாரியென வாதித்து வந்தனர். நடை முறையில் மெஞ்ஞா

னம் வெகு பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும், உலக சம்பவங்களை விசாரித்து வருங்காலை, எவை முடிவுக்கு வரவில்லையோ அவை ஒன்றுக்குப் பின் ஒன்றாக இயற்கையான காரண காரிய சம்பந்தத்தில் கொண்டுவரப்படுகின்றன. இத்தியாதி சம்பவங்கள் சிலவற்றை ஈங்கு தெளியவுரைப்போம்.

மதவாதிகள், ஆதியில் உலகத்தைக் கடவுள் சிருஷ்டி என்றார்கள். ஜீயாலஜி என்ற (Giology) மெஞ்ஞானம், உலகமும், உலகிலுள்ள அசீவப் பொருள்களாகிய, கல், மணல், மலை, கடல், ஆறு, ஏரி குளம், மழை, பனி, இடி, மின்னல் யாவும் இயற்கையாகவே உண்டாயினவென நிரூபித்தது. ஆனால், மதமோ, அசீவப் பொருள்கள் இயற்கையாக உண்டான போதிலும், சீவப் பொருள்கள், கடவுளால் சிருஷ்டித்தவை என்றது. உயிர் நூலாகிய பையாலஜி (Biology) உயிர்களும் சிருஷ்டிக்கப்படவில்லை, ஒன்றிலிருந்து ஒன்று பெறப்பட்டவை என்று நிரூபிக்கவும், மதமும் அந்த முடிவை ஒத்துக்கொண்டு, ஆதி உயிர் சிருஷ்டிக்கப்பட்டிருக்கலாமென்றது.

ஆதியில் உயிர் உலகில் மூளைத்தவிதம் மெஞ்ஞானத்திற்கின்னும் நன்றாக விளங்கவில்லை. இதன் சம்பந்தமாக பலத்த ஆராய்ச்சி நடந்துகொண்டே வருகிறது. திரு. போஸ் செய்து வரும் விசாரணையில் சீவனுக்கும் அசீவனுக்குமுள்ள வித்தியாசம் குறையப் பெற்றே வருகிறது. கொஞ்ச காலத்தில் சிறிய உயிர்களை ஆராய்ச்சி ஸ்தாபனங்களில் செய்தாலும் செய்யக்கூடும். அப்படி செய்யமுடியாவிடினும், உயிர் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவென்று மதம் தாவா செய்வது வீணே.

பிரபஞ்ச ஞானத்திலும், மெஞ்ஞானம் "பொத்தல் பொத்தல்" என்று மதங்கள் வீணே வாதித்து வந்தன. ஒரு காலத்தில், சூரியனை எப்படி கிரகங்கள் சுற்றுகின்றன வென்ற ஞானம் விளங்காமலிருந்தது. ஆனால், மதப்பற்றையுடைய கெப்லர் (Kepler) என்ற வானசாஸ்திரி, ஆகாய மாலுமிகளால் (Celestial Steersmen) கிரகங்கள் சூரியனைச் சுற்றும்படி நடத்தப்படுகின்றன வென்றார்! சில வருஷங்களுக்குப் பிறகு நியூடட்ன் (Newton) என்ற மாபெரும் வானசாஸ்திரி, கவர்சி, அதாவது ஒரு பொருள் இன்னொரு பொருளை இழுக்கும் சக்தியால் (Gravitation) ஒன்றை யொன்று சுற்றுகிறதென்று கணித மூலமாக நிரூபித்தார். இந்த கவர்சிசக்தி அல்லது கவர்சித் திட்டம், (Law of gravitation) பிரபஞ்ச

முழுமையும் வியாபித்துள்ளனவென பிரபஞ்ச நூலோர் இன்று நிரூபிக்கின்றார்கள். இவ்விதமாக மதம் தாக்கின இடங்களெல்லாம், மெஞ்ஞானம் கைப்பற்றியது.

இது இவ்வாறு நிற்க, பிரபஞ்சம்—அதாவது சூரியன், சந்திரன், நவக்கிரகங்கள், நட்சத்திரங்கள், அதன் கூட்டங்கள், வெண் மாசிகள், (Nebular) முதலிய ஆகாயப் பெரும் பொருள்களைப் பெற்ற விதம் தெரியாமையால், அவைகளை கடவுளருளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று, மதவாதிகள் வாதித்து வந்தார்கள். பிரபஞ்ச ஆராய்ச்சிக்கு வேண்டிய கருவிகள் அபிவிருத்தி அடையவும், பிரபஞ்சம் வந்த வழி விளங்க ஏற்பட்டது. இந்த விளக்கத்தை "வெண்மாசி சித்தாந்த" மெனவும் (Nebular Hypothesis) கூறுவர். இந்த பிரபல சித்தாந்தம், திருத்தப்பட்டு, "வெள்ள சித்தாந்தம்" (Tidal Theory) என்ற யுக்தி மூலமாக, ஸர். ஜேம்ஸ் ஜீன்ஸ் (Sir james jeens) என்ற பெரியார் விளக்குகின்றார். இவ்விதமாக, மதங்களால், சிருஷ்டி என்ற இடங்கள் எல்லாம் இயற்கையாக முடிந்தன. மனிதனுக்கு தெரியாத இடங்களை எல்லாம், மதங்கள் கைப்பற்றிப் பார்த்தன. ஆனால் மெஞ்ஞானமோ விடாமுயற்சி கொண்டு ஒன்றன் பின் ஒன்றாக, அந்த இடங்களைக் கைப்பற்றி மக்களுக்கு ஞானமும் தெளிவும் உண்டாக்கி வருகின்றது.

சென்ற 30,40 வருஷங்களாக, சில மெஞ்ஞான நிபுணர்கள், மதச்சார்பாகச் சில பொய்த் தோற்றங்களையும், சில ஜால வித்தைகளையும் சில மோசங்களையும் நம்பி, பேய், பிசாசு, நரகம் மோட்சம் உண்டென வாதித்து வருகின்றார்கள். இவர்களைப் பூதப் பேய்களை நம்புகின்றவர்கள் என்று வழங்குவார்கள். இவர்களால் உலகம் சிறிது காலம் திப்பிரமை அடைந்து வந்தது. ஆனால், மெஞ்ஞானமோ சாந்தத்துடனும் பொறுமையுடனும் விசாரிக்கத் தொடங்கியது. அது முதல், பேய் பூதப்பிசாசுவாதிகளைக் கோர்ட்டுகளில் தண்டிக்கப்பட்டும், அவர்களின் மோசம் வெளிப்படுத்தப்பட்டும் விட நேர்ந்தன. அவ்விதமாக நூற்றுக்கணக்கான மோசடிக்காரர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டும்கூட, மத மோகத்தால் அவ்வித மோசடிகளில் சில, உண்மையென நம்பும் சில போலி விஞ்ஞானிகளுமுண்டு. ஸர். ஆலிவர் லாட்ஜ், ஸர். ஜேம்ஸ் பாராட், ஸர். வில்லியம் குருக்ஸ் முதலியோர்களுக்கு மதப் பழக்க வாசனையை முன்னிட்டு மதக்கற்பிதங்களை விட்டொழிக்க மனம் வர

வில்லை. அதுபோல, வான நூலாசிரியர்களிலும் சில பிரபல சாஸ்திரிகளும், மதச்சார்பாக சில அபிப்பிராயங்களைச் சென்ற இரண்டொரு வருஷங்களாக வெளிப்படுத்தியுள்ளனர். மேற்கூறிய வான நூலோர் கொண்ட அபிப்பிராயங்கள், எவ்வளவு தூரம் மதங்களுக்கு ஆதாரமாக இருக்கின்றதெனச் சற்று விசாரிக்கப் புகுவோம்.

அறிஞர்களில் சிறுபான்மையோருக்கு, மதப் பற்று இருந்து வருகிறது. ஆனால், மதங்களால் சீவிப்போர் பலர். இதனைக் கண்டு பயந்து எந்த அறிஞர்களாகிலும் மதச் சார்பாக ஏதேனும் வாய்ப் பந்தலாவது போடமாட்டார்களா வென ஆவல் கொண்டிருக்கின்றார்கள் சிலர். இத்தியாதி சந்தர்ப்பத்தில் பிரபல விஞ்ஞானி யாராகிலும் ஒருவர் கற்பனார்த்தமாக எதையாகிலும் சொல்லிவிட்டால், அந்தச் சொற்களைக் கொண்டு, மதக் குருமார்களும், மதப் பற்றுடையோரும், மத அபிமானிகளும், கடவுள் நம்பிக்கைக்கு அனுகூலமாகச் சொல்லிவிட்டார். "மதமும் விஞ்ஞானமும் ஒன்றுபட்டுவிட்டது. விஞ்ஞானக் கொள்கைகள் சிலவை அறவே மருட்டிவிட்டது, பரிணாமம், ஓர் நோக்கைக் கோரியே நிகழ்வுறுகிறது" என்று மனப்பாடம் பண்ணத் துணிந்துவிடுகின்றார்கள். இதனைக் கேட்ட அல்லது படித்தப் பாமர மக்கள் முதல் நூற்களை அறியாதவர்களாதலால், மதச்சார்புடையோர் சொல்லும் கூற்றை நம்பிவிடுகின்றார்கள். இதனால் மதமும் இன்னுஞ் சில காலம் மனிதர் உள்ளத்தைப் பாழாக்கச் சக்தி பெறுகிறது (இந்த சார்பைத் தடுக்கவும், மனிதருள்ளத்தில் பகுத்தறிவு பதியவும், இந்த வாசகத்தை எழுதத்துணிந்தோம். நமது நோக்கம் பரவவும்; மெஞ்ஞானஉண்மைவிளங்கவும், நமது "பகுத்தறிவு" இந்த வாசகத்திற்கு இடம் தருமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.) தற்போது, மதஸ்தர்கள் தங்கள் மதத்திற்கு முக்கிய ஆதாரமாகக் கருதிவரும் மெஞ்ஞானிகள் மூவர். இவர்கள் முற்கூறிய ஸர். ஜேம்ஸ் ஜீன்ஸ் என்பார் ஒருவர். இரண்டாவது எடிங்டன் என்னும் அறிஞராவர். இவ்விருவரும் பிரபலமான நூலோர்களே. இவர்களுக்கெல்லாம் மேலானவர் எனக் கூறப்படும். பிரபல ஈன்ஸ்டின் என்ற பெரியார் மூன்றாவதாவார். இம்மூவரும் சிற்சில அபிப்பிராயங்களை, பிரபஞ்ச ஆதாரத்தைக் குறித்தும், பூத பௌதிக நிகழ்ச்சிகளைக் குறித்தும், பரமாணுக்களின் சுழற்சியைக் குறித்தும், வெளியிட்டு வந்திருக்கின்றார்கள். இந்த அபிப்பிராயங்கள் மதஸ்தர் வணங்கும்

ஆதி, முதல்வனுக்காகிலும், கடவுளுக்காகிலும் அல்லது விஞ்ஞான மதத்தைச் சார்ந்தே வருகின்றதென்பதற்காகிலும் ஏதாகிலும் உதவியாக இருக்கின்றதாவெனப்பார்ப்போம்.

மதங்களுக்கு ஆதாரம் மூன்று. அவையாவன :-கடவுள் ஒன்று, நித்தியவாழ்வு இரண்டு, இஷ்டம்போல் நடப்பது மூன்று. இம்மூன்றின் பேரில்தான் புத்த மதம் தவிர மற்றெல்லா மதங்களும் கட்டப்பட்டுள்ளன.

முதலில் கடவுளை எடுத்துக்கொள்ளலாம். மதவாதிகள் கூறும் கடவுளுக்கு, மேற் கூறிய விஞ்ஞானிகள் ஆதாரமளிக்கின்றார்களாவெனப் பார்ப்போம்.

ஜீன்ஸ் என்னும் பெரியார், நமது பிரபஞ்சத்தில் நமக்குத் தெரிந்தவரையில், நமது உலகில் ஒன்றில்தான் மனமுடைய புருஷர்கள் இருப்பதாகவும், நமது உலகைத்தவிர, மற்ற இடங்களில் எங்கும் மனமென்பது உண்டென்பதற்கு யாதொரு ஆதாரமும் கிடையாதென்கிறார். இவருடைய உத்தேசத்தின்படி மனத்தையுடைய கடவுளொருவர் இருப்பது நமக்குத் தெரியவராதென்பதே. இது இப்படியானால் இந்த விஞ்ஞான மூலமாக மதத்திற்கு எந்த ஆதாரம் உளதாக எண்ணுவது? இது நீங்கலாக தனது நூல் ஒன்றில் வேண்டுமானால், ''கடவுள்'' ஆதியில் ஆகாயப்பொருளை இயக்கியதாக நினைத்துக் கொள்ளலாமென்றார், இந்த வாக்கியத்தை அடுத்தே, இவ்விதம் யோசிப்பது பக்குவமற்ற யோசனை என்கின்றார். மற்றொரு நூலில், விஞ்ஞான முகமாகக் கடவுளை அறியவேண்டுமானால், அக்கடவுள் மனிதர் நினைக்கும் கடவுளாகாமல், கணிதக் கடவுளாக நினைக்கலாமென்றார். இந்தக் கடவுளுக்கு ஈகை, தயை, அழகு, சிருஷ்டி, அதிகாரம் ஒன்றும் இல்லையென்றே நினைக்கவேண்டுமாம். இவ்வித கடவுள் மதவாதிகளுக்கு வேண்டுமானால் அவர்கள் வைத்துக் கொள்வதில் யாதொரு ஆட்சேபனையும் இல்லை. ஜீன்ஸ் கூறும் கடவுளுக்கு கோவில், குளம், தூபதீபப் பிரார்த்தனை, அபிஷேகம் செய்வானேன்? இது நிற்க, ஜீன்ஸ் என்ற பெரியார், இந்த சிந்தனைகளெல்லாம், ஒன்றும் நிச்சயமில்லாத உத்தேசங்களெனவும் ஒத்துக்கொள்கின்றார். இத்தியாதி உத்தேசங்களின் பேரில், எந்த மதத்தை ஸ்தாபிப்பதென்று மதஸ்தர்களே தெரிந்துகொள்ளட்டும்.

இரண்டாவது எடிங்டன் என்ற பெரியாரை எடுத்துக் கொள்ளுவோம். இவர் கணிதத்திலும், வான ஆராய்ச்சியி லும் வல்லவர். இவரால் விஞ்ஞான விஷயமாக எழுதப்பட்ட நூற்கள் பிரபலம் பெற்றவை ஆனால் மத சம்பந்தமான கூட்டத்தில் தான் செய்த பிரசங்கத்தில் என்ன சொல்லு கிறாரென்றால், எந்த மதத்தையும் விஞ்ஞான ஆதாரவில் வைக் கமுடியாதென்றும், வேண்டுமானால் மதஸ்தர்கள் தங்கள் மதத்தை ஸ்தாபிக்கவேண்டில் அதற்கு அவர்களே ஆதாரங் களைத்தேடிக்கொள்ள வேண்டுமென்கிறார். இவருடையக் கரு த்தைக் கொண்டு எந்த மதஸ்தர்கள் விஞ்ஞானத்தைத் தங் கள் மதத்திற்கு ஆதாரவாக எடுத்துக்கொள்ள இடமுண்டென் றும் கேட்கின்றோம்?

மூன்றாவது ஈன்ஸ்டின் பெரியார் கூறும் கடவுளை எடு த்துக்கொள்ளுவோம். இவர் பிரபல ஞானி. இவருடைய சிற்சில யோசனை அற்புதங்களென எண்ணலாம்! இவர் கூறும் "கடவுள்" மதஸ்தர்களுக்கு திருப்தி கொடுக்குமாவெனப் பார் ப்போம். இப்பெரியாரை ஒரு மதஸ்தர் கேட்டார். "நீர் கட வுளுண்டென்று நினைக்கின்றீரா? என்றார். ஆம் நினைக் கின்றேன். என்னுடைய கடவுள் சகலத்திலும் நிறைந்தவர். ஆனால்அவருக்கு மனிதனுடைய கதியைப் பற்றியும், செய ல்களைப் பற்றியும் கவலை யாதொன்றுமில்லை" என்றார். எல்லா மதஸ்தர்களும் கடவுளானவர் தங்கள் பேரில் கருணை யுடையவர். தங்களை இரட்சிக்கும் சக்தியையுடையவர் என்று எண்ணுகின்றார்கள். ஆனால் ஈன்ஸ்டின் பெரியார் சொல் லும் கடவுளுக்கு மனிதர் விஷயத்தில் யாதொரு கவலையுமில் லை என்றால், அத்தகைய கடவுள் இருந்தென்ன? இல்லா விடிலென்ன?

மதக் கோட்பாடுகளில், மனிதன் தனது இஷ்டம் போல் நடப்பதென்பதும், கடவுள் தனக்குக் கர்த்தாவின்றி நடப்ப தென்பதும், முக்கியமானது. இதைக்குறித்து விஞ்ஞானம் தெரிவிப்பதென்னவெனில் எல்லா சம்பவங்களும் காரண கா ரிய முறையில் சம்பந்தப்பட்டவை. காரணகாரிய முறையில் சம்பந்தப்படாத தோற்றங்கள், பிரபஞ்சத்தில், நமக்குத்தெரி ந்தவரை, இல்லை. அவ்விதம் இந்த அகில முறையில், எந்தத் தோற்றமாகிலும் உட்படாதனவாகத் தோன்றும் பட்சத்தில் நமது அறியாமையால், அவ்விதம் தோன்றுவதல்லாது, இந்த அகில முறைக்கு உட்படாத தோற்றம் எதுவுமில்லை என்று

விஞ்ஞானம் முடிவு கொண்டிருக்கிறது. இந்த விஞ்ஞான முடிவு விசாலப்பட்டிருப்பதை மேற் கூறிய மெஞ்ஞானிகள் சந்தேகிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். ஆனால், இந்த மெஞ்ஞானிகளில் ஒருவராகிய ஜீன்ஸ் என்பவர், சில பௌதிக விசாரணையில், சில தோற்றங்கள் தங்கள் இஷ்டம்போல் நடப்பதாகக் காட்டினபோதிலும், இனி வருங்காலத்தில் இவ்வித தோற்றங்களும் காரண காரிய முறையை அனுசரித்திருப்பதை முன்போல் கண்டாலும் காணலாம் என்கின்றார். இந்த இரண்டாவது, மதக் கோட்பாட்டிற்குள் இடமில்லாமல் மெஞ்ஞானிகள் கைவிடுகின்றார்கள். நேற்று வெளிவந்த மெஞ்ஞானப்புஸ்தகமொன்றில் ("தற்கால மெஞ்ஞானம், பிரபஞ்சத்தைக் குறித்து என்னவுணர்த்துகிறது." பிளாங்க்.) எழுதிய ஆசிரியர், இஷ்டம்போல் நடக்கும் சித்தார்த்தத்திற்கு பூத பௌதிக தோற்றங்களுக்கு இடமில்லை என்று எழுதப்பட்டுள்ளது.

கடைசியாக எந்த மெஞ்ஞானியும் எந்தப் பொருளையும் நித்தியமென்று கூறுவதை நாம் அறிவோம். இந்த இடத்தில் மதஸ்தர்களுக்கு மெஞ்ஞான உதவி இல்லவே இல்லை. பாரம்பரியமாகக் குருட்டு வாய்ப்புகளில் பரிணாமம் நிகழ்கிறது என்று சிலர் கூறுகின்றார்கள் இந்த வேகமான ஓட்டத்திற்கு எந்த ஆதாரவையும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. அமரிக்க மெஞ்ஞானிகளாகிய லோயெட், (Loed) வாட்ஸன் (Watson), ஜென்னிங்ஸ், (Jennings) முதலியோர், அந்தந்த நிர்வாகப்படி, உயிர்கள் பரிணமிக்கின்றனவேயொழிய வேறு எவ்வித அதிகாரியும் தலையிட ஆதரவு இல்லை என்றே எண்ணுகின்றார்கள்.

சில மெஞ்ஞானிகள் மதத்திற்கு ஆதரவு அளிப்பதாகத் தோன்றினாலும், அவர்கள் தனித்த தரப்பில் சில அபிப்பிராயங்களைக் கொண்டதாக எண்ண வேண்டுமேயொழிய, மெஞ்ஞானத் தரப்பில் மதங்களுக்கு எவ்வித ஆதாரவும் அளிப்பதாக நினைக்க இடமில்லை. அவர்களிற் சிலர், ஏதோ ஒரு "பரவஸ்து" இருப்பதாக எண்ணி அந்த "பரவஸ்து" க்கும் மதஸ்தர் வணங்கி வழிபடும் தெய்வங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றே மேற்கூறிய விசாரணையில் கண்டோம். நம்பிக்கைக்கு முடிவு இல்லை. ஆனால், எதை நம்ப வேண்டுமென்பது பகுத்தறிவைக் கொண்டு விசாரித்தால்தான் விளங்கும்.

அன்னை நாகம்மையார்.

S. C. சிவகாமி.

திருமணம்.

தென்னிந்தியப் பெண் மக்கள் திலகம்; பெண் மக்களுக்கு ஒரு வழிகாட்டி; பொதுஜன ஊழியர்கள், தலைவர்கள் அனைவராலும் நன்கு அறியப்பட்டவர்; அன்பும், நாணமும், அடக்கமும், அஞ்சாமையும் ஒருங்கே அமையப்பெற்ற அன்னையார்; ஈ. வெ. ரா. நாகம்மையார் அவர்கள்.

இவருடைய வாழ்க்கைச் சரிதம் பெண்மக்களுக்குப் பெரும் படிப்பினையை ஊட்டக்கூடியது; ஆண்மக்களுக்கும் அவ்வாறே. அன்னையார் பிறந்த குடும்பம் செல்வம்படைத்த பெருங் குடியன்று. சாதாரண வாழ்க்கையையுடைய நடுத்தரக்குடி. ஈ. வெ. ராவின் அன்னையாருக்கு உறவினர்.

ஈ. வெ. ரா. தமது இளம்பருவத்திலேயே நாகம்மாளைச் சந்தித்திருந்தார். நாகம்மாளும் ஈ. வெ. ராவைச் சந்தித்திருந்தார் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் அன்புகொண்டிருந்தனர். அன்னையார் இளம்பருவ விளையாட்டுப் பெண். வயது 12. ஈ. வெ. ராவுக்கு நல்ல வாலிபப்பருவம். வயது 19. ஈ. வெ. ராவின் தந்தையார் வெங்கட்ட நாயக்கர், பெரிய வைணவ மத பக்தர். பிரபல வியாபாரி; பெருந் தனவந்தர்; தமது மைந்தன் ஈ. வெ. ராவுக்கு மணம்புரிவிக்க எண்ணினார். செல்வக்குடியில் சம்பந்தம் பண்ணவேண்டும் என்பது அவரது ஆசை. அவர் கருத்து ஈ. வெ. ராவுக்குத் தெரிந்தது. ஈ. வெ. ரா.-வோ நாகம்மாளே நான் விரும்பும் மனைவி என்றார்; வேறொரு பெண்ணை விரும்பேன் என்றார். இவர் பிடிவாதத்தின் முன் தந்தையின் ஆசை நிலைக்கவில்லை.

நாகம்மையாரின் பெற்றோரும், அவருக்கு வேறு மணம் பேசினர். மணம் பேசப்பட்டவர் முதிர்ந்த வயதினர். இருமுறை மணமாகி இரு மனைவிகளையும் இழந்தவர், மூன்றாந் தாரமாகவே அன்னையாரைப் பேசினர். இச் செய்தியை அறிந்தார் அன்னையார். ஈ. வெ. ராவையே மணப்பேன்!

அந்த முதிர்ந்த வயதினரை மணப்பதைவிட உயிர் விடுவேன்! என்று கூறினார். 12 வயதில் என்ன தைரியம்! என்ன உறுதி!

கடைசியில் ஈ வெ. ராவுக்கும் அன்னையார்க்கும் மணம் முடிந்தது. சுமார் 38 ஆண்டுகளுக்கு முன் ஒரு பெருங் குடும்பத்தில் இவ்வாறு காதல் மணம் நிறைவேறியது.

இல்லற வாழ்வு.

''நாகம்மாளை மணந்து வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 35 வருட காலம் வாழ்ந்துவிட்டேன். நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணையாகக் கொண்டிருந்தேனே அல்லாமல், நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் ''மைனராய்'' ''காலியாய்'' ''சீமானாய்'' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வில் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதரவாய் இருந்தார் என்பது மறுக்க முடியாத காரியம்''

''நாகம்மாள் உயிர்வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல; என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் உணர்ந்து வந்தேன்''

மேலே கூறியவை, ஈ. வெ. ராவின் சொற்கள், அம்மையார் இறந்தபோது, பிரிவாற்றாது உள்ளம் வருந்திக்கூறிய உண்மை யுரைகள்.

மனைவாழ்க்கையைப் பொறுத்த வரையிலும் அன்னையார் பழங்காலத்துப்பெண். தன் விருப்பப்படி கணவனை நடக்கச் செய்யும் நாகரீகப்பெண்ணல்லர். கணவன் எண்ணம் சரியோ தவறோ அதற்கு மாறுபடாதவர். அவர் செய்கை எதுவாயினும் அதற்குத்துணை செய்பவர்

இரவு நேரங்களில் ஈ. வெ. ரா அந்நாட்களில் வெளியில் சென்று விடுவதுண்டு. ''எங்கே ராமசாமி'' என்று சிலசமயங்களில் ஈ. வெ. ராவின் தந்தையார் அன்னையாரைக் கேட்பார்களாம். உடனே அன்னையார், தமது மாமனார் கோபத்துக்குத்தன் கணவர் ஆளாகாத வண்ணம் ''தூங்குகிறார்கள்'' என்று பதில் சொல்லுவார்களாம். ஈ. வெ. ரா. படுத்திருப்பதுபோல அவருடைய படுக்கையில் ஒரு தலையணை மீது

போர்வை போர்த்தப்பட்டிருக்குமாம். ஈ. வெ. ரா. ''சென்றிருக்கும் இடத்திற்கு'' நல்ல பக்குவமான உணவுகளை வீட்டார் அறியாமல் ஆள்மூலம் அனுப்புவார்களாம. ஈ. வெ. ரா. கேட்கும்போதெல்லாம் தடை கூறாமல் உடனே தான அணிந்திருக்கும் நகைகளை எடுத்துத் தருவார்களாம்; தான் தரிக்கும் ஆடைகளையும் தூக்கிக் கொடுப்பார்களாம். இவைகள் எதற்காகவென்று அன்னையாருக்குத் தெரியும் இக்காலப் பெண்கள் இதற்குச் சம்மதிப்பார்களா ? எவ்வளவு பதிபக்தி!

ஈ. வெ. ரா அவர்கள் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த பிறகும் அன்னையாரின் குணமும் செயலும் அன்று கண்டதற்கு அழிவில்லாமலே இருந்தது. பெண்கள் சுதந்தரம், விடுதலை என்ற விஷயத்தில் ஈ. வெ. ராவின்பேச்சு தலைகீழ்ப்புரட்சியை உண்டாக்கி விடும். அவர் பேச்சைக்கேட்ட தம்பதிகள் இருவரும் சம உரிமையுடன் வாழ்ந்தால்தான் ஒற்றுமையாக வாழ்க்கை நடத்த முடியும். ஒருவரை ஒருவர் அடக்கி ஆள நினைப்பார்களானால் அவர்கள் வாழ்க்கை நீடித்திருக்க முடியாது. இப்பேச்செல்லாம் அன்னையாரின் பழங்குணத்தை மாற்றமுடியவில்லை. இக்காலத்திலும் நமது அன்னையார் ஈ. வெ. ராவின் அடிமைபோல் தான் நடந்து வந்தார்கள் சிறிதும் மாறுபட்டு நடந்ததில்லை. அன்னையார் எக்காலத்திலும் தனக்கென்ற தனித்த சுகதுக்கங்களை விரும்பியவரல்லர். ஈ. வெ. ராவின் சுகதுக்கங்களையே தனது சுகதுக்க வாழ்வாகக் கொண்டிருந்தார்கள்.

அரசியல் வாழ்வு.

பின்னாளில் ஈ. வெ. ரா சொந்த வாழ்வைத்துறந்து பொதுநல வாழ்வில் ஈடுபட்டார். அன்னையாரும் கூடவே அச்சேவையில் இறங்கினார். ஈ. வெ. ரா பொதுநல வாழ்வில் சிறப்படைந்ததற்கு காரணம் அன்னையாரே. அன்னையாரின் பூரண உதவியின்றேல், ஒத்துழைப்பின்றேல் ஈ. வெ. ரா. சிறப்படைந்திருக்க முடியாது; இது மறுக்கமுடியாத உண்மை.

1920-ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தது. ஈ. வெ. ராவும் அதில் அதிதீவிரமாக ஈடுபட்டார். அன்னையாரும் தமது சுகவாழ்வைத் துறந்தார். விலையுயர்ந்த நகைகளைத் துறந்தார். மெல்லிய பட்டாடைகளை வெறுத்தார். முரட்டுக்கதராடை உடுத்தினார். நாம் தேசத்

தின் ஏழை மக்களின் நன்மைக்கு உழைக்கின்றோம். ஆதலால் நாமும் எளியார் போலவே ஆடையணிகள் பூணவேண்டும் என்னும் கருத்தையே மேற்கொண்டார். அஞ்சாமல் வெளிவந்தார். தமிழ் நாட்டுப் பெண்களுக்கு வழிகாட்டியாக முன்வந்தார். ஒத்துழையாமை இயக்கம் வலுவடைந்தது. அரசாங்கத்துக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் பலத்த போராட்டம். இச்சமயத்தில் அன்னையார் முன்னணியில் நின்று போராடினார். இது தமிழ் நாட்டில் ஒரு பெருங்கிளர்ச்சியை உண்டாக்கிற்று. இதனால் அனேக பெண் மக்களும் தைரியமாக இப்போரில் கலந்துகொள்ள முன் வந்தனர்.

1921 ஆம் ஆண்டில் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் வெகு மும்முரமாக நடைபெற்றது. அரசாங்கத்தாரால் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஈ. வெ. ராவும் அவர் தொண்டர்களும் தடையை மீறினர்; கைது செய்யப்பட்டனர். மறுநாள் அன்னையார் ஈ. வெ. ராவின் தங்கை S. R. கண்ணம்மாளுடன் புறப்பட்டார். அரசாங்கத்தின் தடையுத்தரவை மீறினார். ஈரோட்டில் பெருங்கொந்தளிப்பு. தமிழ் நாட்டில் பெருங்கிளர்ச்சி. அரசாங்கத்துக்குப் பெருந்திகைப்பு. உடனே தடையுத்தரவை நீக்கினர். அரசாங்கத்தார். அன்னையாரையும் அவர் தோழர்களையும் கைதி செய்யாமல் விட்டனர். கைதி செய்திருந்தால் ஈரோட்டின் நிலமை எப்படியாகி இருக்கும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும்.

அச்சமயம், மறியல் சம்பந்தமாக அரசாங்கத்துடன் சமாதான ஒப்பந்தப் பேச்சு நடந்தது. சர். சங்கர நாயர் தலைமையில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இதற்கு மாளவியா மகாநாடு என்று பெயர். இம்மகாநாட்டில் திரு காந்தியார், முக்கியமாக ஈரோட்டு மறியலையே குறிப்பிட்டார். ஈ. வெ. ரா. நாகம்மாளின் அபிப்பிராயம் தெரிந்தே முடிவு செய்யவேண்டும் என்று கூறினார்.

1920-ஆம் ஆண்டு முதல் 6-ஆண்டுகள் அன்னையார் எல்லாக் காங்கிரஸ்களுக்கும், அரசியல் மகா நாடுகளுக்கும் கணவருடன் தவறாமல் போய் வருவதுண்டு. அவர் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினராயிருந்திருக்கிறார்.

வைக்கம் சத்தியாக்கிரகம்

ஒத்துழையாமை இயக்கம் மறைந்தது. 1924-ஆம் ஆண்டில் வைக்கம் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் ஈ. வெ. ரா. ஈடுபட்டார். நாகம்மையாரும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். தமிழ் நாட்டிலிருந்து பல பெண்களையும் வைக்கத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போராட்டத்தில் கேரளப்பெண்களும் உற்சாகத்துடன் சேரும்படி செய்தார். தமது கணவர் கைதியான பிறகும், காங்கிரசின் உதவி கிடைப்பதற்கு முன்பும் தனித்து நின்று அப்போராட்டத்தை அஞ்சாமல் நடத்தினார். வைக்கத்தில் தமது வெற்றிக் கொடியைப் பல மாதங்கள் பறக்கும்படி செய்தார். அவர் சேனாதிபதியாக இருந்து வைக்கம் தெருக்களில் பெண்கள் படையை நடத்திச் சென்ற காட்சி சமூக ஊழியர்களைத் தட்டியெழுப்பியது. கொடிய சூரிய வெப்பத்திற்கும் பெருத்த மழைக்கும் பின் வாங்காமல் கோவில் வாசற்படி முன்பு அவர் நின்று சத்தியாக்கிரகம் செய்த காட்சி எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டது; அப்போரில் ஈடுபடும்படி செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்ச்சியை அதிகமாகக் கிளப்பி விட்டது. வைதீகர்களின் மனத்திலும் பெருந்திகிலை உண்டாக்கிற்று.

இதுவரை உலகில் நடந்த சத்தியாக்கிரகங்களில் வெற்றி பெற்றது என்று சொல்லக்கூடியது வைக்கம் சத்தியாக்கிரகம் ஒன்றேயாகும். இவ்வெற்றிக்குக் காரணம் நமது அன்னையாரே.

"வீட்டின் ஒரு மூலையில் பேடெனப் பதுங்கிக் கிடந்த நம் அம்மையார் தீண்டாமை எனும் பேயை வெட்டி வீழ்த்துவான் வேண்டி வைக்கம் சத்தியாக்கிரகப் போரில் புகுந்து சிறை சென்று அரசாங்கத்தை நடுங்கச் செய்ததுடன் அமையாது வாகைமாலையும் சூடினார்" என்று திரு. வி. க. முதலியார் அவர்கள் கூறியிருப்பது உண்மை! உண்மை!! உண்மை!!!

சுயமரியாதை இயக்கம்.

பின்னர் 1925-ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கம் ஆரம்பமாயிற்று அவ்வியக்கத்திற்கென்றே "குடியரசும்" அந்த ஆண்டிலேயே பிறந்தது. பத்திரிகை தோன்றியது முதல் அன்னையார் இறக்கும் வரையிலும் தாமே அதன் பதிப்பாசிரியராகவும் பிரசுர கர்த்தாவாகவும் இருந்து வந்திருக்கிறார்.

அவர்கள் செல்லாத சுயமரியாதை மகாநாடுகள் இல்லை. ஈ. வெ. ரா போகும் இடமெல்லாம் தவறாமல் உடன் செல்வதே வழக்கம்.

ஆரம்ப காலத்தில் சுயமரியாதைக்கு எதிர்ப்பு அதிகம். வைதீகர்களின் எதிர்ப்பு ஒருபுறம். காங்கிரஸ் காரரின் எதிர்ப்பு மற்றொருபுறம். வைதீகப் பார்ப்பனர்களுடைய எதிர்ப்பு வேறொரு பக்கம். ஈ. வெ. ராவையும், அன்னையாரையும், மனிதத்தன்மையற்ற முறையில் திட்டி, கடிதங்கள் பல வரும்; இருவரையும் பொதுக் கூட்டங்களில் கொலை செய்வதாகப் பலகடிதங்கள் வரும். இவைகளுக்கெல்லாம் அன்னையார் சிறிதும் அஞ்சுவதில்லை. பொதுக் கூட்டங்களுக்குத் தாராளமாகச்சென்று வருவார்கள். சுயமரியாதை இயக்கம் வெற்றி பெறுவதற்கும், அதில் ஏராளமான பெண்மக்கள் தாராளமாகக்கலந்து கொள்வதற்கும் அன்னையாரே காரணமாவார்.

"அவர் தமது கணவரின் எல்லா முயற்சிகளிலும் மிகுந்த உற்சாகத்துடன் ஒத்துழைத்ததே சுயமரியாதை இயக்கத்தின் வெற்றிக்குக் காரணமாகும். மூடக்கொள்கை களினின்று மக்களை விடுவிக்கும் பொருட்டு அவர், தமிழ்நாடு, கேரளம், மலாய், ஆகிய இடங்களில் உள்ள எல்லா ஜில்லாக்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். அவர் ஒரு பிரசங்கியல்ல; ஆனால் அவர் பிரசன்னமாயிருக்கும் ஒவ்வொரு கூட்டத்திலும் பெண்கள் தீவிரமாகக்கலந்து கொள்ளுவார்கள். அவர் எல்லோரையும் அன்புடன் உபசரிப்பார். அவருக்கு மக்கட்பேறு இல்லை; ஆனால் பொதுஜன நன்மைக்காக வேலைசெய்த எல்லா இளைஞர்களையும் பெண்களையும் தமது சொந்தப் பிள்ளைகளாகப் பாவித்து வந்தார். அவர் தமது சிறந்த கொள்கைகளுக்காக வேலை செய்தவர்களுக்கெல்லாம் ஒருதாயாக இருந்தார். அவர்களுடைய சொந்த சவுகரியங்களை அவர் தாமே நேராகக்கவனித்து வந்தார். சமூகப் போராட்டத்தில் வீட்டை இழந்தவர்களுக்கு அவர் அபயம் அளித்தார்"

இது, தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் எழுதியது. இதிலிருந்து சுயமரியாதை இயக்கத்திற்கு அன்னையாரின் ஆதரவு எவ்வளவு என்று அறியலாம். அன்னையார் இன்றேல் சுயமரியாதை இயக்கம் வளர்ந்திருக்க முடியாது.

அன்னையாரின் மலாய்நாட்டு விஜயத்தைப்பற்றி, சிங்கப்பூர், முன்னேற்றம் பத்திரிகை, எழுதியிருப்பது கவனிக்கத்தக்

கது. "அவர்களின் மலாய் நாட்டு விஜயத்தால் மலாய் நாட்டு மக்கள் எல்லாம் அவருக்கு அறிமுகமானார்கள் மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கம் அதிதீவிரமாய் பரவியிருந்ததைப்பார்த்த அன்னையார் அடைந்த களிப்பு அளப்பரியது. சிங்கப்பூருக்கு வந்திருந்து திரும்புங்கால் அவர்களுக்கு விருப்பமான—தேவையான மலாய் நாட்டுப்பொருள் என்ன வேண்டுமென்று நாம் கேட்டதற்கு "நீங்கள் எல்லாம் இம்மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பியிருப்பதே நான் விரும்பும் பொருள்" என்று அன்னையார் சொல்லிய வார்த்தைகள் இன்னும் நமது செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன" என்று எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈ. வெ. ரா அவர்கள், மேல் நாட்டுச்சுற்றுப் பிரயாணம் சென்றபோது அன்னையாரை அழைத்துச்செல்லாதது அன்னையாருக்கு அளவு கடந்த துக்கம். அதனாலேயே அவருக்கு உடல்நலிவு ஏற்பட்டது. ஆயினும் அவர்கள் இயக்கத்தையும் பத்திரிகையையும் தளராமல் நடத்தி வந்தார்கள் ஈ. வெ. ரா சுற்றுப்பிரயாணத்திலிருந்த சுமார் பத்து மாதங்களும் சுயமரியாதை இயக்கமானது அதற்கு முன்செய்த வேலையை விட அதிக வேலை செய்தது. இதற்குக்காரணம் அன்னையார் இயக்கத் தோழர்களுக்கு அளித்த உற்சாகமேயாகும்.

திறமையும் பெருமையும்.

அன்னையாருக்குக் கல்வியில்லை; ஆனால் பிற்காலத்தில், ஈ. வெ. ரா. மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணம் போயிருந்த காலத்தில் கொஞ்சம் படிப்புக் கற்றுக்கொண்டார். அந்தப் படிப்பு கையெழுத்திடுவதோடும், தட்டுத்தடுமாறிப் படிப்பதோடும் நின்றுவிட்டது. படிக்கவேண்டுமென்னும் பேராசையிருந்தது, உடல்நிலை இடங்கொடுக்கவில்லை. படிப்பில்லாவிட்டாலும் சிறந்த திறமையுண்டு. பெருங்காரியங்களை நிர்வகிக்குஞ் சக்தியுண்டு. போதிய அனுபவமும் நுண்ணறிவுமுண்டு குடும்ப சம்பந்தமான காரியங்களில் ஈ வெ. ரா. கவலைப் பட்டதேயில்லை. முன்னறிவிப்பில்லாமல் எத்தனை பேருடன் வீட்டிற்குச் சென்றாலும் உணவு தயாராக இருக்கும். 5-பேர்களானாலும், 50-பேர்களானாலும் ஒரேவித உபசரிப்பு; உணவுக்கென ஒரு நேரமும் இல்லை. பகலாயினும் சரி, இரவாயினும் சரி, பகலிலும் காலங்கடந்த காலமானாலும், இரவிலும் நடு நிசியானாலும் வந்தவர்களுக்கு அறுசுவையுண்டியிட்டு உபசரிக்கும் திறமையும், குணமும் அன்னையாரிடம்

உண்டு. பலபேருக்கு அன்னமிட்டு மகிழ்வதையே அவர் தமது எல்லாச் செயல்களிலும் தலை சிறந்த செயலாகக் கொண்டிருந்தார் உண்போர் கூட்டம் குறைவாயிருந்தால் அன்னையார் முகத்தில் மகிழ்ச்சியும்குறைந்திருக்கும். உண்போர் கூட்டம் மிகுதிப்பட மிகுதிப்பட அவர் முகத்தில் மகிழ்ச்சியும் மிகுதிப்பட்டுக்கொண்டே இருக்கும். இது வெறும் மகிழ்ச்சியன்று; அகமலர்ச்சியை வெளிப்படுத்தும் உண்மைத் தோற்றம்.

சாப்பாட்டு விஷயத்தில் சில சமயங்களில் ஈ. வெ. ராவுக்குச் சிக்கன புத்தி தோன்றுவதுண்டு. "அதிக பதார்த்தங்கள் வேண்டாம். நெய்யைக் குறைக்கலாம். பாலைக் குறைக்கலாம்" என்று யோசனை கூறுவார். அன்று ஈ. வெ. ரா. சாப்பாட்டில் மாத்திரம் அவர் கூறியபடியே வைக்கப்படும். மற்றவர்களுக்கு எப்பொழுதும் போல் நடைபெறும். இவ் விஷயத்தில் மாத்திரம் அன்னையார் ஈ. வெ. ராவுக்குக் கீழ்ப் படிவதில்லை. சாப்பாட்டுச் சிக்கனத்தை ஈ. வெ. ராவால் வற்புறுத்தமுடிவதுமில்லை. வற்புறுத்தினால் தன் சாப்பாட்டுக்குத்தான் ஆபத்து வருகிறது. பாவம்! என்ன செய்வார்!

ஈ. வெ. ரா அவர்களைப் பரம விரோதியாக நினைப்பவர்கள் உளர்; ஈ வெ. ராவுடன் கூடியிருந்து பிறகு பிரிந்து நின்று வெறுப்போரும் உளர்; ஈ வெ ராவின் தனிப்பட்ட குணங்களை இழித்துக் கூறுவோரும் உளர்; ஆனால் இவர்கள் அனைவரும், ஒருபொழுதும் அன்னையாரை வெறுத்த தில்லை; அவரைப்பற்றிக் குறை கூறியதுமில்லை. அவருடைய பெருந் தன்மையையும், சிறந்த குணங்களையும் பாராட்டியே பேசுகிறார்கள்.

அன்னையார் படிப்பில்லாதவராயிருந்தாலும், மேடையேறிப் பேசும் ஆற்றலற்றவராயிருந்தாலும், பத்திரிகை படியாதவராயிருந்தாலும் நல்ல விஷய ஞானம் உள்ளவர். காங்கிரசில் இருக்குங் காலத்திலும் அதன் கொள்கைகளைப் பற்றி தனித்து ஒவ்வொருவரிடமும் நன்றாய் விவாதிக்கும் திறமையுடையவராயிருந்தார். சுயமரியாதை இயக்கம் தொடங்கிய பிறகும் அக்கொள்கைகளை நன்கு அறிந்திருந்தார். சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப்பற்றி விவாதமிடும் படித்த பெண் மக்களுடனும் படியாத பெண்மக்களுடனும் ஏராளமாக விவாதம் செய்வார். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில்கள் சொல்லுவார் பதில் சொல்

வதோடு திக்குமுக்காடும்படியான எதிர்க் கேள்விகளும் கேட்பார். விவாதிப்போர் எவரும் அன்னையாரிடம் தோல்வியையே அடைவர். இவரிடம் எதிர்த்துவிவாதம் செய்வோர் இறுதியில் இவர் கொள்கையை ஒப்புக்கொண்டுவிடுவார்கள்.

அன்னையார் சாதாரணக் குடியிற் பிறந்தவராயினும் பெருந்தன்மையே உருக்கொண்டது போன்றவர். பரந்த நோக்கமுள்ளவர். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் பாராட்டாதவர். வந்தவர்களை ஆதரிக்கும் விஷயத்தில் சிக்கனம் என்பதைச் சிறிதும் எண்ணாதவர். செல்வக்குடியிற் புகுந்தவராயினும் அகங்காரம் என்பது என்னவென்றே அறியாதவர். ஆடம்பர வாழ்க்கையை அறவே வெறுத்தவர்.

அன்னையார் தன்னை எதிர்ப்போர், மதியாதவர், எவராயினும் அவர்களைத் தானும் மதிப்பதில்லை. ஈ. வெ. ராவுடன், அவர் வெளியிற்செல்வதும், அரசியல் சமுதாய விஷயங்களிற் கலந்து கொள்வதும், உறவினர் சிலருக்குச் சம்மதமில்லை. அவர்கள் அன்னையாரைக் கண்டிப்பதுண்டு. "ஆண்பிள்ளை எப்படியாவது திரிகிறான்; நீயும் ஏன் அவனுடன் சேர்ந்து கெட்டலைகிறாய்" என்று இடித்துக்கூறுவதுண்டு. இதைச்சிறிதும் அன்னையார் லட்சியம் செய்ததில்லை. கணவர் விருப்பத்திற்கு மாறாக நடப்பதில்லை என்பதையே இறுதி வரையிலும் அவர் கடைப்பிடித்துவந்தார்.

இவ்வாறு ஈ. வெ ராவின் வாழ்க்கைத்துறைகள் எல்லாவற்றிலும் ஒத்துழைத்து வெற்றியளித்த அன்னையார், தென்னாட்டின் அரசியல் துறையிலும் சமுதாயத்துறையிலும் இணையற்ற சிரோன்மணியாகத்திகழ்ந்த நாகம்மையார் சென்ற 1933-ஆம் ஆண்டு மே மாதம் 11-ஆம் தேதி பொது ஜன ஊழியர்களும், உறவினர்களும், அவர் கணவரும் மனம் பதைக்க மாண்டார்.

அன்னையார் உயிருடன் வாழ்ந்த ஆண்டுகள் 48. இந்த நாற்பத்தியெட்டு ஆண்டுகளில் அவர் நமது சமூகத்துக்குச் செய்த ஊழியம் நமது சமூகம் உள்ளவரையிலும் மறக்கக் கூடியதன்று. அன்னையாருக்குப் பின், அவர் மறைந்ததனால் உண்டான நஷ்டத்தை வேறு யாரும் நீக்கமுடியாது.

ஈ. வெ. ரா. நாகம்மாள்.

குடி அரசு வெளியீடுகள்.

8-அணா வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடு (Dr R P. பராஞ்சிபை.)
இராமாயண ஆராய்ச்சி 2-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
கைவல்ய சாமியாரின் கட்டுரைகள், (கைவல்யம்)

4-அணா வெளியீடுகள்.

இராமாயண ஆராய்ச்சி 1-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
லெனினும் மதமும்.
விவாஹ விடுதலை (K. M. பாலசுப்ரமண்யம்)
கடவுளும் பிரபஞ்சமும் (M சிங்காரவேலு)
பங்கஜம் or பார்ப்பனக்கொடுமை
சுதந்தரப் போர்

3-அணா வெளியீடுகள்,

பொது உடைமைத் தத்துவங்கள்
தர்ம பரீக்ஷை
மேயோ கூற்று மெய்யா பொய்யா (C. A. அய்யாமுத்து)

2-அணா வெளியீடுகள்.

சீர்திருத்தம் (ஈ. வெ. ராவின் சொற்பொழிவு)
மனுநீதி விளக்கம் (சிவானந்த சரஸ்வதி).
அகஸ்தியர் ஆராய்ச்சி (வித்வான் நமச்சிவாய முதலியார்)
இராமலிங்க சுவாமிகள் பாடல்கள்

1-அணா வெளியீடுகள்

போல்ஷிவிக் முறை
பர்னாட்ஷா உபந்நியாசம்

½-அணா வெளியீடுகள்

சமதர்ம உபந்யாசம் (M. சிங்காரவேலு)
இலங்கைச் சொற்பொழிவு (ஈ. வெ. ரா.)

இதர பதிப்பக வெளியீடுகள்.

1-ரூபாய் வெளியீடுகள்.

The Crux of the Indian Problem, (Dr R. P. Pranjibi)
The Right of the temple entry (P. Chidambaram)

8-அணா வெளியீடுகள்.

சிதம்பர ரகசியம் (தென்பார்தி கனகசபை)
மாதர் சுதந்தரம் (சாமி சிதம்பரனார்)
நச்சுப்பொய்கை (C. A. அய்யாமுத்து)

6-அணா வெளியீடு.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0
குடி அரசுக் கலம்பகம்	,,	0 6 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எதியவை.

மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதபுரட்சி	,,	0 4 0

அறிஞர் சேனிக்யூ எழுதியது.

பாதிரிகளும் பெண்களும் பாவ மன்னிப்பும் ...	,,	0 3 0

தோழர் M சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம்		0 6 0
ஷை II-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியது

பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும்	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
ஷை காலிக்கோ பயிண்டு ...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (வ. பீ. நா. பி.)	.	0 4 0

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் Ltd, ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy for the Rational Books Publishing Society Ltd. at the Unmaivilakam Press, Erode.